பல்சுவை

# தமிழ்நெஞ்சம்

www.tamilnenjam.com ஜூலை 2017



**உதிரும் சிறகுகள்**

...

மழை ஓய்ந்த
முன்னிரவில்
சாளரத்தின் வழியே
அறையில் புகுந்து
மின் விளக்கை
மொய்த்து
முட்டி மோதி
சிறகுகள் உதிர்த்து விழும்
ஈசல் கூட்டம்
காலையில்
திட்டியபடியே
செத்த உடல்களோடு
சிறகுகள் கூட்டிக்
குப்பையில் எறிந்து -
ஏதோ இருளை
மோகித்து
ஏதோ சாளரம் வழியே
நுழைந்து
சிறகுகள்
உதிர்க்கப் போவோம்
நாம்.

**கவிக்கோ அப்துல் ரஹ்மான்**

# பிடிவாதக்காரி



பொதுவாக பிடிவாத குணமுடைய பெண் மனைவியாக அமைந்தால் வாழ்க்கை மிகவும் மோசமாக ஆகிவிடும் என்று சில ஆண்கள் கருதுகிறார்கள்.

கோபம் உள்ள இடத்தில் தான் குணம் இருக்கும். அது போல பிடிவாத குணம் உடைய பெண்களிடம் தான் சிறந்த மனைவியாக திகழும் தன்மை இருக்கிறது. அவர்கள் பிடிவாதம் பொருட்களை வாங்குவதில் மட்டும் இருக்காது, வாழ்க்கையில் எவ்வாறு முன்னேற வேண்டும் என்ற எண்ணமும் அவர்களிடம் இருக்கும்.

இல்லத்தரசிக்கு தேவையான அனைத்து குணாதிசயங்களும் பிடிவாத பெண்களிடம் இருக்கும்.

தனக்கு என்ன வேண்டும் என்பதில் தீவிரமாக இருக்கும் பெண்கள், வேண்டாதவை மீது ஆசைப்படமாட்டார்கள். அதே போன்று வேண்டுவதையும் விட்டுக் கொடுக்க மாட்டார்கள்.

ஒரு விஷயத்தின் மீது வைக்கும் அவர்கள் காதல் மிகவும் அழகாகவும், நேர்மையாகவும் இருக்கும்.

பிடிவாத குணமுடைய பெண்கள் அழுதாலும், கோபப்பட்டாலும், அன்பு காட்டினாலும் முழு மனதுடன் வெளிப்படுத்தும் தன்மை கொண்டவர்கள்.

நீங்களே சோர்வுற்று நின்றாலும், உங்களை பிடிவாதமாக அச்செயலில் ஈடுபட்டு உங்களை வெற்றி பெற வைப்பார்கள்.

எந்த ஒரு விஷயமாக இருந்தாலும், அதை முகத்திற்கு நேராக பேசிவிடுவார்கள். இதன் காரணமாக சண்டை எழலாம். ஆனால், அது சுமூகமாக முடிந்துவிடும். தொடர்ந்து கொண்டே இருக்காது.

சுவாரஸ்யமானவர்கள் பிடிவாத குணம் இருப்பினும் கூட, சின்னச் சின்ன சண்டைகள், சச்சரவுகள், கடுமையான நேரத்தில் கவலைகள் மறக்க செய்யும். இவர்களது லூட்டிகள் சற்றே சுவாரஸ்யமானதாகவே இருக்கும்.

பிடிவாதம் இருக்கும் அதே அளவிற்கு இவர்களிடம் அனுதாபமும் இருக்கும். சூழ்நிலை புரிந்து கொண்டு அதற்கேற்ப தங்களது ஆசைகள் மற்றும் எதிர்பார்ப்பை அதிகரித்து கொள்வார்கள்.

பிடிவாத குணமுடையவர்கள் மத்தியில் தன்னம்பிக்கை அதிகமாக இருக்கும். அதன் காரணமாக உங்களுக்கும் தன்னம்பிக்கை அளிக்கும் வகையில் நடந்து கொள்வார்கள்.

இவர்களது பேரார்வம் வேலை, மற்றும் இல்வாழ்க்கை விஷயங்களிலும் கூட தொடரும். இதனால், எந்த திட்டத்தை நிறைவேற்றுவதில், வீடு, பொருட்கள், சேமிப்பு போன்றவற்றிலும் கூட இவர்கள் சீராக நடந்து கொள்வார்கள்!

ஜெஸ்சி ஜெஸ்சிகா

நன்மக்கள் உள்ளமெலாம் நல்லொளியால் நிரம்பட்டும்,
நன்னெறிபால் எல்லோரும் ஒருங்கிணைந்து திரும்பட்டும்!

பல்சுவை

# தமிழ்நெஞ்சம்

தோற்றம் 1972

ஜூலை 2017

ஆசிரியர் / வெளியிடுபவர் :
அமின் மொஹமெட்

இணையாசிரியர் :
சஃபி மொஹமெட்

ஆசிரியர் குழு :
ஹிப்ஸுர் ரஹ்மான்
"காகிதம்" மனோபாரதி
சத்தியபாமா சந்திரன்
அழகுநிலா
சு.பீர்முகமது
ஓவியக்கவிஞர் உமாபதி
"நம் குடும்பம்" ஆ. வர்க்கீஸ்
நெல்லை உலகம்மாள்
வசந்தி ஆதித்தன்
கவிஞர் அ.முத்துசாமி
கவிஞர் ஈழபாரதி
கவிதாயினி செந்தாமரைக்கொடி
கவிஞர் கலந்தர் பூமதீன்
கவிஞர் பாலமுனை பாறூக்

ஆலோசகர்கள் :
"பைந்தமிழரசு" பாவலர் மா. வரதராசன்
கவிதாயினி சக்தி ஜோதி
கவிதாயினி அமுதா பொற்கொடி

**எழுத்தாளர்கள், நன்கொடையாளர்கள், புரவலர்கள் மற்றும் விமர்சனம், அறிமுகத்திற்கு நூல்கள் அனுப்ப அஞ்சல் தொடர்புகளுக்கு ...**

TAMILNENJAM
59, rue des Entrechats
95800 Cergy - France

web : tamilnenjam.com
email : editor@tamilnenjam.com

புதிய ஆக்கங்களும், விமர்சனங்களும் எதிர்பார்க்கப்படுகின்றன. நூல் விமர்சனத்துக்கு, நூலின் இரண்டு பிரதிகளை அனுப்ப வேண்டும்.

படைப்புகளுக்கு படைப்பாளிகளே பொறுப்பு. செவ்வைப் படுத்த ஆசிரியர் குழுவுக்கு உரிமையுண்டு.

## புதிய வெளியீடுகள்




ஸ்ரீலங்காவில் நூல்கள் பெற...

Faisha Naufal,
73A, Aalim road, meeravodai-04,
Oddamavadi, Batticaloa, Sri Lanka
email : faishanaufal2016@gmail.com
Contact no : 0777838475

# ஷோக்கா மாட்டிக்கிச்சி கிக்கான கேஸ்



**மலர்மதி**

அவள் தனியாக அங்கே நின்றிருந்தாள். தோளில் மாட்டிய லெதெர் பேக், ஹை ஹீல்ஸ், கண்களில் மிரட்சி...

பார்க்க ஒரு கல்லூரி மாணவி ரேஞ்சில் இருந்தாள். அடிக்கடி, பார்வையை நாலாபுரமும் சுழற்றிக்கொண்டிருந்தாள். லிஃப்டுக்காகக் காத்திருக்கிறாளோ என்னமோ.

அந்தப் பிராந்தியம் முழுக்க மயான அமைதி பரவிக்கிடந்தது.

சற்றுத் தொலைவில் பைக்கில் வந்துக் கொண்டிருந்தான் அவன். வாட்டச் சாட்டமான உடல்வாகு. ரவுடி போன்ற தோற்றம். முரட்டுத்தனமாய்த் தெரிந்தான்.

ஓர் இளம் பெண் தன்னந்தனியாக நிற்பதை தூரத்திலிருந்தே பார்த்தவன், ‘சட்’டென வேகத்தைக் குறைத்து பைக்கை ஓரங்கட்டினான். அவளுக்குப் பின்புறமாய் இருந்த வாழைத்தோப்புக்குள் புகுந்து அவள் அறியாவண்ணம் அவளை மிக நெருக்கத்தில் பார்த்து அசந்துப் போனான்.

உடனே செல்லை எடுத்து அழுத்தியவன், அங்கிருந்து வேகமாக வேறு இடத்துக்குத் தாவினான்.

“ஹலோ... மச்சி, செம ஃபிகரு ஒண்ணு மாட்டி இருக்கு. மத்தவங் களையும் கூட்டிக்கிட்டு உடனே வா.” என்றவன், லொகேஷனைச் சொன்னான்.

அடுத்த பத்தாவது நிமிடத்தில் அந்த நான்கு பேரும் பைக்குகளில் வந்து சேர்ந்தனர்.

இவனோடு சேர்த்து மொத்தம் ஐந்து பேர்.

ஆள் அரவமற்ற அந்த இடத்தில் இப்படி ஒரு புதையல் கிடைக்கும் என்று அவர்கள் எதிர்பார்க்கவில்லை.

வட்டமடித்து அவளைச் சூழ்ந்தனர்.

கண்ணிமைக்கும் நேரத்தில் அவளை ‘தர,தர’வென இழுத்துக்கொண்டு வாழைத் தோப்புக்குள் நுழைந்தனர்.

கைகளை உதறி தன்னை விடுவித்துக் கொண்டவள், “அய்யே கசமாலம். அப்படி என்ன அம்புட்டு அவசரம்? நானும் கிராக்கி கெடைக்குமானு எவ்ளோ நேரமா நின்னுக்கிட்டிருக்கேன். வாங்க, ஒவ்வொருத்தரா வாங்க. ஆளுக்கு நூறு ரூபாதான். ஜாஸ்தி ஒண்ணுமில்ல. அக்காங்க...” என்றாள்.

சம்மட்டியால் அடித்ததுபோல் இருந்தது.

அவளை அப்படியே விட்டுவிட்டு ஓடி மறைந்தனர்.

அவர்கள் தலை மறைந்ததும், கைப் பையிலிருந்து செல்லை எடுத்தவள், பேச ஆரம்பித்தாள்.

“அப்பா.. உடனே புறப்பட்டு வாங்க. அதிர்ஷ்டவசமா நான் ரவுடிங்ககிட்டே இருந்து தப்பிச்சிருக்கேன். இன்னைக்கு எனக்கு ஸ்பெஷல் கிளாஸ் இருந்ததனாலே லேட் ஆயிருச்சு. குறுக்கு வழியில சீக்கிரமா வந்துடலாம்னு வாழைத் தோப்பு வழியா வந்தது தப்பாயிருச்சு.”



# புதுமைப்பெண்

அரசுப்பொதுத் தேர்வில்
மாணவிகள் முதலிடம்!
ஆசிட் வீச்சில்
மாணவிகள் மரணம்!

பலகலை நிகழ்ச்சிகளில்
மாணவிகள் முதலிடம்!
ஒருதலைக் காதலால்
மாணவிக்கு அரிவாள்வெட்டு!

விண்வெளியை ஆராய்ந்திட
விரைகிறார்கள் பெண்கள்!
பாலியல் பலாத்காரத்தால்
பலியாகிறார்கள் பெண்கள்!

மாதவம்செய்து
மங்கையராய்ப் பிறந்தால்
சேதாரமாக்கிச் சிதையில்
சேர்க்கிறார்கள்!

நேர்கொண்ட பார்வைகள்
குருடாகிப் போகின்றன,
வரதட்சனைக் கொடுமையெனும்
கூர்வாள்களால்!
நிமிர்ந்த நன்நடைகள்
முடங்கிப் போகின்றன,
மதங்களெனும் பிரிவினை
ஆயுதங்களால்!

பெண்விடுதலை பெற்றுள்ளோம்,
நீதிகேட்டு வழக்கில் உள்ளது
சுதந்திரம் வேண்டிய திருமணங்கள்!

மணமாகும்வரைப்
பெற்றோர் சொல்கேட்டு,
கல்யாணமானபின்
கணவனுக்குக் கட்டுப்பட்டு,
மரணம்வரை மகனை எதிர்பார்த்து....
மீறினால் வதைகளும்
மாறினால் கதைகளும்!

கூட்டநெரிசல்களில்,
ஓடும் பேருந்துகளில்,
பயணிக்கும் ரயில்களில்,
உடைகள் சரிபார்க்கும்
கடைகளின் அறைகளில்,
தங்கும் விடுதிகளில்,
ஆசிரியர்களின் ஆசைகளில்,
அலுவலக மேலாளர்களின்
கழுகுப் பார்வைகளில்,
இன்னும்பலவற்றில் சிக்கித்தான்
தினமும் திரும்புகிறோம்!

வாழ்க்கைப் படகை
சமுத்திரத்தில் செலுத்துகிறோம்.
வீழ்ந்தால் முத்தெடுப்போம்,
வாழ்ந்தால் கரைசேர்வோம்
“நாங்கள் புதுமைப்பெண்கள்”

**:பாத்திமாஹமீத்**
ஷார்ஜா



# விவசாயி

குமார் முருகேஷ்

அமெரிக்க பல்கலைகழகத்தில் விவசாயத்திற்கான உயரிய விருதினை பெற்றுத்திரும்பிய மூன்றாவது நாளே முகேஷ் சில ஆட்களுடன் நீரின்றி வறண்டு போன தன் விவசாய நிலத்தைக்காட்டி ஏதோ பேசிக்கொண்டிருந்தான்..

அதைப்பார்த்த அவன் தந்தையான விவசாயி மருதமுத்து வேதனைப்பட்டார்...

“இந்த காலத்துப்புள்ளைங்க அப்பன் சொத்தை சுலபமா வித்துடறாங்க. ஆனா அப்பன் செய்த தொழிலை மட்டும் செய்யத்தயங்குறாங்க, இப்படி வெவசாய நெலத்தையெல்லாம் கூறுபோட்டு வித்துப்புட்டு நாளைக்கு சோத்துக்கு என்னபண்ணப் போறாங்கனு தெரியலையே. இப்படி வெவசாய நெலத்தை விக்குற ஒருத்தனுக்கா வெவசாய விருது குடுத்தாங்க என்ன உலகமடா இது”

இதைக்கேட்டுக்கொண்ட முகேஷ் சிரித்தான். உடன் வந்தவர்களும் சிரித்தார்கள்.

மறுநாள் காலை

தன் விவசாய நிலத்திற்கு சென்ற மருதமுத்து அங்கு கண்ட காட்சி ஒரு சொர்க்கத்திற்குள்ளே வந்துவிட்டது போல இருந்த. விளையாமல் கிடந்த நிலத்தில் ஒரு பூஞ்சோலையே இப்போது குலுங்கிக்கொண்டிருந்தது. அவரை பார்த்த முகேஷ் அவரிடம் வந்து பேசினான்.

‘அப்பா’ மழை இல்லையேன்னு விவசாயிங்க புழம்பரதால ஒன்னும் ஆகிடாதுப்பா. இதுவும் ஒரு விவசாயம்தான் அப்பா. கொஞ்சமா இருக்க தண்ணிய விட்டு இந்த செடிகளையும் மரக்கன்றுகளையும் நாம வளர்த்தி விட்டோம்னா வரும் காலமாச்சும் கொஞ்சம் சந்தோசமா இருக்கும் அப்பா நானும் ஒரு விவசாயிமகன் தான்ப்பா நானே எப்படி விவசாய நிலத்தை விப்பேன்?

“நீ விவசாயி மகன் இல்லைப்பா நீயும் ஒரு விவசாயி” என்று அவனை கட்டிக்கொண்டார் மருதமுத்து.

■



# காதலே...

உன் கண்கள் திறந்து
என் தேகம் எடுத்துக்கொள்...

இவரவுகளில்
சாளரங்களைச் சாத்தி விட்டு
சந்தங்கள் பாடுகிறேன்
ஒரு முறையேனும் சந்திப்பாயா....?

துளியாகித் திரிகிறேன்
துடைத்து விடாமல்
தின்று விடு...!

வட்ட நிலாக் கிழித்து
பக்கம் பக்கமாய் எழுதுகிறேன்
உனக்கான வரிகளை
உணர்ந்து உயிர் கொடுப்பாயா...?

குளிர் காற்றும்
கோபமாய் போகிறது
துணையற்ற என்னை
தொடுவதா என்று...!

நீலத் தாமரையே
எனக்குள் நீந்த வா
தூரிகை எனக்கு சுவராக வா
துயிலாமல் காத்திருக்கிறேன்...!

வரிகளுக்குள் சாய்கிறேன்
பனி விழுந்தும் காய்கிறேன்
பகலிரவாய் தேய்கிறேன்
நேசமே நெஞ்சிலொரு இடம்
கொடுப்பாயா...?

வெப்பமுண்டு ஏங்கினேன்
முப்பொழுதும் முன்னைப் பாடினேன்
காதலே வந்துவிடு...!

அக்கரைக்குயில்

ஏ எச் ஹிம்ஸானா

# à J ˜ ¶ ®Š ¹

கரு விழிகளில் வரைந்த கண் மை
சொல்லும் ஆயிரம் கதைகள்!
நரை மயிர் கோலமிட,கருங்கூந்தல்
சொல்லும் இளமை கதைகள்!
அம்மா இட்ட திருஷ்டிப் பொட்டு
கன்னத்தில் மின்னிய கதைகள்!
வடை திருடும் கரிய காகத்தின்
பாட்டியின் நீதிக் கதைகள்!
மறவாது என்றும் கருமையின்
இவ்வழகிய நிலைகள்!
கருப்பு... நிறம் ஒன்று!
உருவகமான குணங்கள் வேறு!
நிர்மலமான மனதில் சந்தேகம் எனும்
கறுப்புத் துளி!
நிதர்சன வாழ்வை துஷ்பிரயோகிக்கும்
சாத்தானின் வழி!
நீதி தேவதை கண்களில் கட்டிய
கருப்பு துணி,
அறிவாளா அவள் லஞ்சத்தின்
சேவல பணி?
கருப்பு, அதன் தன்மை சொல்லிடும்
மண்ணறையின் இருப்பு!
மானிடர் நாம் அறிவோமா என்று
நின்றிடும் நம் உயிர் துடிப்பு?

ஈழத்தென்றல்



# நாளையும் நமக்கானதே

– இசைவாசி

எப்படியும் மேலே வந்து விடுவோம் என்ற நம்பிக்கையிலே எத்தனையோ பேர் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் என்பது நாம் உணர்ந்த உண்மை. அதில் எந்த ஒரு பெரிய இன்னல் வந்தாலும் போடா நமக்கு எதிர்காலம் இருக்கிறது என்று தைரியமாக நடக்க ஆரம்பித்தவர்கள் வெற்றிகளை அனுபவிக்கிறார்களோ இல்லையோ ஓரளவு மேலே வந்து கொண்டிருக்கிறார்கள்.

நம்முடைய மூலதனம் என்பது ஒன்று நமக்கான அடையாளத்தையும் அரியணையையும் தரக் கூடிய இலக்கு, இனனொன்று அந்த இலக்கை விட்டு விடாமல் நம்மை வலிமையாக வைத்திருக்கும் நம்பிக்கை இவை இரண்டும் தான் ஒருவன் உயரங்களுக்கு எளிதாக இழுத்து செல்கின்றன என்பதை அனுபவித்தே சொல்கிறேன்.

“நிறைய ஆடிப்பட்டவனுக்கு தான்டா வெற்றியின் உண்மையான அர்த்தம் தெரியும். இல்லனாலும் தோல்வியையும் வெற்றியையும் சமமாக பார்க்க முடியும் டா” எப்படியும் வருவேனு காத்திருக்கும் மதிப்பிற்குரிய அண்ணன் ஒருவர் சொன்னது உண்மையான கருத்தும் கூட.

குப்பைகளையும் சாணங்களையும் போட்டு வளர்க்கப்படும் விவசாயம் வளமான விவசாயமாக மாறும். அதை போலவே தான் நம்முடைய வாழ்க்கையும் பல குப்பைகளாக இருக்கும் இன்னல்கள், அவமானம், தடை பிரச்சனை, தோல்வி, புறக்கணிப்பு, ஏமாற்றம், அலைக்கலைப்பு போன்றவைகளை தாங்கி கொண்டு மேல வர வேண்டி இருக்கும் இந்த வாழ்க்கை வளமான வாழ்க்கையாக மாறும். மகாகவி புரட்சிக்கவி என்ற பெயருக்கு பேர் போன பாரதியால் கவிதைகளையும் கட்டுரைகளையும் எழுத தான் முடிந்ததே தவிர நூலாக்கம் செய்ய முடியவில்லை. ஆனால் இன்று அவன் வார்த்தைகளை படிக்காத ஒரு மாணவனும் இருந்து விட முடியாது.

ஒருமுறை பாரதியின் நண்பரான ஸ்ரீநிவாச்சாரியார் பாரதியிடம் ‘பாரதி ஒரு சங்கத்தார் கவிதை போட்டிக்கு ஏற்பாடு செய்திருக்கிறார்கள். நீ அதற்கு கவிதை எழுது என்றார்.

பாரதி பள்ளி கருவத்திலே கவிதை எழுதுவதில் கில்லாடி. இப்போது விட்டுவிடுவானா என்ன முதல் பரிசு 300 - ரூபாய், இரண்டாம் பரிசு 200 - ரூபாய், முன்றாம் பரிசு 100 - ரூபாய், கிடைக்கும் பரிசு தொகையை வைத்து எப்படியும் குடும்ப செலவை சமாளித்து விடலாம் என்று கனவு கண்டு கொண்டிருக்கிறாள் பாரதியின் மனைவி செல்லம்மாள்.

பாரதி எழுதி அனுப்பிய கவிதைக்கு மூன்றாம் பரிசு தான் கிடைத்தது. முதல் பரிசு, இரண்டாம் பரிசு வாங்கிய கவிஞர்கள் யாருன்னு கூட நமக்கு தெரியாது.

**"உள்ளம் ஒத்துழைக்காமல் போகும் போது நமது உடலும் அந்த வேலைக்கு தகுந்தாற் போல ஒத்துழைக்காது"**

ஆனால் மூன்றாம் பரிசு பெற்ற பாரதியை நினைப்பில் வைத்திருக்கிறோம். செவ்வனே செயலாற்றி நாளையை வென்றவன் பாரதி. மூன்றாம் பரிசு வாங்கிய பாரதியின் கவிதை

"செந்தமிழ் நாடென்னும் போதினிலே
இன்ப தேன் வந்து பாயுது காதினிலே
தந்தையர் நாடென்னும் போதினிலே
ஒரு சக்தி பிறக்குது மூச்சினிலே" என்ற கவிதை தான்.

"எமக்கு தொழில் கவிதை" என்று விரும்பி வாழ்ந்தவன் அவன்.

விருப்பத்தோடு செயல்படுங்கள் வாழ்க்கை உங்களை விரும்பும்.

ஒரு தொழிலை தொடங்கும் போது இறைவனை வணங்கி மட்டும் செயல்பட கூடாது. அந்த தொழிலையே வணங்கி செய்தல் வேண்டும். தொழிலை கடவுளாக கண்ட பரம்பரை நம் தமிழ் பரம்பரை. உடலால் செய்தால் கர்மயோகம் உள்ளத்தால் செய்தால் யோக கர்மம் கண்ணதாசன் கீதை விளக்கவுரையில் இவ்வாறு கூறுவார். உள்ளம் ஒத்துழைக்காமல் போகும் போது நமது உடலும் அந்த வேலைக்கு தகுந்தாற் போல ஒத்துழைக்காது.

விருப்பத்தோடு ஒன்றினை செய்யும் போது அந்த வேலை உயிர்ப்பு பெற்று செழுமை அடைகிறது. நீங்கள் செய்யும் பணியே உங்களை வளர்த்து விடும் என்றே நம்புங்கள்.

கொடுக்கல் வாங்கல் முறை என்ற ஒன்ற இந்த வாழ்க்கையில் இருக்கிறது. நிலத்தை வருத்தி விதைத்தால் அங்கு விளைச்சல் மேலோங்கும். உழைப்பை கொடுத்தால் அங்கு ஊதியம் மேலோங்கும், விருப்பத்தோடு கொடுங்கள் வேலையை.

செயல்கள் அனுபவங்களாக மாறி பலபேர்க்கு பால பாடமாக இருந்து

வாழ்க்கையை சுவாரஸ்யமானதாக மாற்றி அமைக்கிறது. அப்போ செயல்கள் நம்மையும் நம் வாழ்வையும் தீர்மானிக்கிறது என்பதை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும்.

ஒரு தத்துவஞானியும் சொல்வான் “செயல்களுக்கு உயிர் இருக்கிறது” என்று நம்முடைய வாழ்க்கை கொடுத்து பெறும் ஒன்றே ஆகும். நாம் கொடுத்தால் கிடைக்கும். வளர்ச்சிக்காக உழைப்பையும் உழைப்பிற்காக நேரத்தையும், நேரத்திற்கான முயற்சியும் முயற்சிக்காக எண்ணங்களையும், எண்ணங்களுக்காக இலக்கையும் கொடுத்தால் நிச்சயமாக வாகை சூடும் நேரம் வாய்த்து விடும். செயல் அனுபவமாக மாறி அதுவே வாழ்க்கையாக மாறும். ஒவ்வொரு நாளும் நமக்கான விடியல் விடிந்து கொண்டே நம்மை எழுப்புகிறது. இந்த நாள் அடுத்த நாளைக்கான சிறந்த முதலீடே ஆகும். என்பதை உணர்ந்து விட்டால் அதை வீணாக்க மாட்டோம். வாழ்வின் அர்த்தம் அதை நல்ல முறையில் அணுகு வதிலே இருக்கிறது. எல்லோருக்கும் இருக்கிற நிலையான உண்மையான சொத்து இந்த நிமிடம் மட்டும் தான். யாருக்காகவும் விட்டு கொடுக்காமல் அதை அனுபவித்து வாழ்ந்து விடுங்கள். வாழ்வு உங்களுக்கானதே நாளையும் உங்களுக்கானதே.

# வயோதிகம்

‘‘நெடுநாள் பார்க்க முடியாமல் போன
முகங்களை நேரில் கண்டதும்
அகமுகமும் மலர்ந்து
வாஞ்சையின் வருடல்களோடு கரம் பற்றும்,
நலன்கள் விசாரித்து நேரம்
எளிதில் கடந்து விடாதபடி
ஆதுரமாய் விரல்கள்
பற்றியிழுத்து கதைகள் பேசும்,
மீண்டும் கைவராத காலங்கள்
குறித்த சலிப்பைச்
சொல்லி மாளும், மறுநாள்
மீண்டும் ஏக்கங்களோடும்
இயல்பான இயலாமையோடும்
திரும்பியிருக்கும்
விடைகள் தேடித் தீர்க்க காத்திருக்கும்
வயோதிகம்!’’

**அரவிந்தன். வி**

உணர்வுகளோடு பணியாற்றுங்கள்
ஊதியம் மட்டுமல்ல உயரங்களும் வந்து சேரும்
இன்றும் நமக்கானதே

நாளையும் நமக்கானதே
எல்லோருக்கும் எதிர்காலம் உண்டு



# தீர்மானம்

ஹேமலதா

என்ன ஆயா இங்க நிக்கிறீங்க பசிக்குதா?

இல்லை சாமி மோர் குடிச்சேன் பசிக்கலே தவிர, விடியக்காலே இருந்து இந்த அடுப்பாங்கறேயிலே நின்னது அந்த எண்ண வாசனே...

அப்ப ஏன் நிக்கிறீங்க பந்தி இப்பத்தானே ஆரம்பிச்சது முடிஞ்சப்புறம் போய் வேலை பாக்கலாமில்ல என்ன யோசனை?

சாமி நான் ஒண்ணு சொன்னா கோபிக்க மாட்டீங்களே ?

சும்மா சொல்லுமா நாம என்ன இன்னிக்கி நேய்த்திக்கி பழக்கமா?

இன்னிக்கி காது குத்தி விசேஷம் வச்சி சாப்பாடு போடுதே அந்த ராமு தம்பி, அது கடன் வாங்கி கஷ்ட்டப்பட்டு தானே இந்த விசேஷம் நடத்துது?

ஆமா, என்ன செய்யறது. அவன் ஒருத்தன் தானே சம்பாதிக்கிறான். நாலு பிள்ளைங்க; இரண்டு பொம்பளை புள்ளேங்க, வயசான அப்பா அம்மா, அவன் எதோ கூலி வேலைய்க்கி போய் கொண்டார காசு தானே அம்மா சீக்கு காரி அவ ஆசப்பட்டான்னு பேர புள்ளங்களுக்கு காது குத்து. நானே அதனாலே எப்படி கம்மி யா செய்யணுமோ செஞ்சிருக்கான்.

அப்ப, இங்கே சாப்பிட வரவங்க எவ்வளவு வீணடிக்கிறாங்க. ஒரு எலயாவது சுத்தமா காலி ஆயிருக்கா? அப்படி அப்படியே மீதி வக்கிறாங்க!

எத்தனை சாப்பிடுவாங்க சோறு சாம்பாரு ரசம் பாயசம் அதுதான் சாப்பிடு வாங்க.

அப்ப எதுக்கு மூணு காய் இரண்டு கூட்டு பச்சடி அது இதுன்னு செய்யணும்?

வாறவங்களுக்கு வயிராற போடணும். எதுக்கு வீணடிக்கனும் எத்தனி வகையா செய்யணுமா?

இல்லேன்னா கஞ்சப் பயல்ன்னு சொல்லு வாங்க!

சின்ன சின்ன புள்ளங்களே பெரிய்ய ஏலய்லே. அவங்களே மடிலே வுக்கார



■

காய்ந்த வரப்பு
நக்கி துடைக்கிறது
பாவம் மழைக் கானாத ஆடு

■

மடியில் சில்லரை
கடைக்குள் மறுப்பு
பசியொடு பிச்சைக்காரன்

■

உச்சி வெய்யில்
முட்டை சூடு
இனவிருத்தி காக்கைகள்

■

கலைக்கப்படுகிறது
கட்டிய வீடு
அறுவடை

■

இரும்பு கம்பி
காய்ந்த இரத்தம்
சாதி கொலை


## அ. இளையராஜா
சிதம்பரம் (இடையன் பால் சொரி)




வச்சி ஊட்டி விடல்லாமில்ல? அதுங்க கையில ஒரு இனிப்போ வட அப்பளமோ கொடுத்தா போறாதா? பெரியவங்கள மாதிரியே அதுங்களுக்கும் எல்லாம் பரிமாறி அதுங்க சீண்டறது கூட இல்லை.

என்ன செய்யறது? இது தானே எல்லா பக்கமும் நடக்குது. இதாவது தேவலாம் பணக்காரங்க வீட்டு விருந்தே பாக்கணுமே... நம்ம ஜனங்களாவது சோத்தே திங்குதுங்க. அவுக தொடகூட மாட்டாங்க. அதெல்லாம் எலே கணக்கு வேறே

எனக்கு இதேல்லாம் மனசு ஆவலங்க. பணக்காரன்களோ ஏழைங்களோ இப்படி சாப்பாட்டே வீணாக்க கூடாது!

நீ சொல்லறது சரி தான். ஆனா, நீயும் நானும் என்ன செய்யறது? இவங்க இந்த மாதிரி கொண்டாடினாதானே எனக்கும் உனக்கும் பொழப்பு ஓடும்.

என்னாலே முடியல்லேங்க. எனக்கு ஒரு நாள் கூலிக்கி நான் இதேல்லாம் பாக்க வேண்டாமுங்க. நான் தீர்மானிச்சிட்டன், இந்த வேலை எனக்கு வேண்டாம். அதனால், இனி என்னை இந்த மாதிரி வேலைக்கு கூப்பிடாதீங்க...

பின்னே உன்ன என்ன கலெக்டர் வேலைக்கா கூப்பிட முடியும்?

ஏன்? இங்கே கலெக்டர் வேலை ஒண்ணு தான் காலியா இருக்கா ?

என் கையிலே துடைப்பம் இருக்கு. நம்ப ஊர் ஜனங்க எத்தனை குப்ப தொட்டி வச்சாலும் வெளீல தான் குப்ப போடுங்க. அதனாலே, இங்க குப்பைக்கும் பஞ்ச மில்லை. கூட்டி அள்றவங்களுக்கும் எப்பவும் வேலை இருக்கும். அதனாலே நான் தீர்மானம் பண்ணிட்டேன். இந்த சாப்பாட்டே தூக்கி குப்பேலே போடற வேலைக்கு இனி நான் இல்லை.

■

# எல்லாம் ...

## அவன் செயல்!

ஆல் படர்ந்து நிழல் தந்தால்
ஆயிரம் பேர் தங்கிடலாம்
பால் உறைந்து தயிரானால்
பக்குவமாய் நெய் பெறலாம்
சேல்கெண்டை வெண்மேகம்
சென்றுவிடும் காற்றுடனே
சூல் கொண்ட மேகம் வந்தால்
தொடந்து வரும் மழைப்பொழிவு!

## அவன் அருள்!

பூமி பிளந்து புதுத்தளிர் எழுந்தது
பொன்னை உருக்கிக் கதிரொளி பரப்பினான்
தாமிரபரணியில் தண்ணீர் வந்தது
தாவரப்பச்சை தரணியை நிறைத்தது
காலைப்பனியும் கடுகி மறைந்தது
கன்றுகள் பசுமடி முட்டிக் குடித்தன
சோலைக் குயில்கள் இன்னிசைபாடின
தோட்டத்தில் அணில்கள் துள்ளி ஓடின!

மரபுக்கவிஞர் **அ. அப்துல் முத்தலிப்**



# புரியாத புதிர்

கௌசி

எமது வாழ்க்கையில் அடுத்த நிமிடம் என்ன நடக்கப்போகின்றது என்று எமக்குத் தெரிவதில்லை. இன்று ஒரு மாதிரி நாளை ஒரு மாதிரி. ஏன் அடுத்த நிமிடமே ஒரு மாதிரி.

வெளியிருந்து வரும் காரணிகள் தவிர எமது மூளையே எம்மைச் சில சமயங்களில் ஏமாற்றிவிடுவதும் உண்டு. சரியாகச் செய்துவிட வேண்டும் என்று ஒரு விடயத்தைச் செய்யும் போது எம்மை அறியாமலே பிழை ஏற்பட்டு எமது மதிப்புக்கு பங்கம் வந்துவிடுகின்றது. பேசுகின்ற போது கூட ஒன்றைநினைத்து ஒன்றைப் பேசும் நிலமைகூட ஏற்படுவது உண்டு. இங்கு எமது மூளை எம்மை ஏமாற்றிவிடுகின்றது. பிறர் சுட்டிக்காட்டும்போது கூனிக்குறுகி நின்று விடுகின்றோம். இச்சம்பவம் சந்திக்காத மனிதர்கள் யாருமில்லை என்று சொல்லிவிடலாம். சில சமயங்களில் சில விடயங்களில் வீட்டு வேலைக்காரி கூட அறிவாளியாய்த் தொழிற்படுவாள். என்னால் முடியும். என்னால்தான் முடியும் என்று யாரும் கர்வம் கொள்ளல் மடத்தனம். உனக்குள்ளும் மடமை ஒழிந்திருக்கிறது என்று ஒரு சமயம் உணர்ந்து கொள்வாய். அது எப்படி, எங்கிருந்து, எவ்வகையில் வெளிப்படும் என்று யாருக்கும் புரியாது.



நாம் என்று நாம் நினைப்பது கூட எமக்குச் சொந்தமில்லை என்பதே உண்மை. வெளிக்காரணிகளை, எமது என்று கையாளும் போது கூட நாம் தவறிவிடுகின்றோமே. சிலவற்றில் தவறு ஏற்படும் போது திருத்த முடியாது பிறர் உதவிகளை நாடுகின்றோம். எல்லாம் தெரிந்த மனிதன் என்று உலகில் யாருமில்லை. தெரிந்ததுகூட தெளிவுறும் போது அவன் உலகில் இருப்பதில்லை. இன்று எமக்கே சொந்தமானது. நாளை வேறு ஒருவருக்குச் சொந்தமாய் இருக்கின்றது. உதாரணமாகக் குடியிருக்கும் வீடு. சொந்தப்பெயர் கூட சில சந்தர்ப்பங்களில் மாற்ற வேண்டிய சூழ்நிலை ஏற்படுகின்றது. இல்லை வேறு யாருக்கோ இப்பெயர் சொந்தமாய் இருக்கின்றது. எமக்கே உரிய இதயம் கூட அறுவைச் சிகிச்சையின் போது மாற்றப்பட்டு விடுகின்றது. உனக்கென்று எதுவுண்டு மானிடனே? இதை உணர்ந்தும் ஆசையில் உழன்று மாய்கின்றாயே!

நான் என்று சொல்வது உடலா? அதற்கு மேலே என்று விக்ரமன் பாணியில் சொல்லும் உயிரா? அதற்குமேலே இரண்டும் கலந்த

*உணர்வா? அந்த நானே என்னைப் புரிந்து கொள்ள முடியாதபோது நான் எனக்குச் சொந்தமாவதில்லையே. காலம் காலமாய் அளவாய், அவதானமாய், கண்ணும் கருத்துமாய் உடல் உறுப்புக்களுக்குப் பங்கம் வராத வகையில் பார்த்துப் பார்த்து எமது உடலுறுப்புக்களுக்கு உணவு பரிமாறுகின்றோம் அல்லவா! எங்கிருந்தோ வரும் நோய் எம்மை ஏமாற்றிவிடுகின்றதே! அவதானமாய்த் தானே இருந்தேன்? எப்படி இந்நோய் வந்தது என்று திகைத்து நிற்கின்றோம் அல்லவா? காரணம்.... கேள்விக்குறி. பிரபலங்களை நோய் வந்து பின்னுக்குத் தள்ளி விடுகின்றதே. யாரோ போட்ட துப்பாக்கிக் குண்டு நடிகர் எம்.ஜி.ஆரின குரலுக்குக் கங்கணம் கட்டியதல்லவா? 19 ஆண்டுகள் பிரபல அநுபவம் பெற்ற விமானஓட்டி ட்ரிஸ்டன் லோரைன் பிரிட்டிஸ் விமாநிறுவனத்தால் வெளியகற்றப்பட்டார். காரணம் புகழ் புரிந்த சாதனை. விமானம் மூலம் கிடைத்த விமானம் வழங்கிய நச்சுவாயு. நினைக்காத ஏதோ வாழ்க்கையில் நடந்து வாழ்க்கையையே திசை திருப்பிவிடுகின்றது.*

*எம்மை அறியாமல் எமக்குள்ளே ஏற்படுகின்ற கோபம் யாருக்குச் சொந்தமானது எமக்குத்தானே. அதை நாம் விரும்பி ஏற்றோமா? துணிவென்று பாடம் சொல்லும் நாமே இறப்பை எண்ணித் துவண்டு விடுகின்றோமே. எமக்குள் ஏற்படும் இவ்வுணர்வு துணிவென்று நிமிர்ந்து நிற்கும் எம்மை ஏமாற்றி விடுகின்றதே. காலம் கற்றுத் தரும் பாடம் கல்லூரிப் பாடத்தை விட சாலச்சிறந்தது. வாழ்க்கை கற்றுத் தரும் பாடத்தின் போதுதான் முன்னோர் எழுதிவைத்த அநுபவக்குறிப்புக்கள் மனிதன் மனதில் உறைக்கின்றது. இதனால் தான் முதியோர் வாழ்வில் தேவை மூதுரை எமக்குத் தேவை.*

*முற்றுமுழுதாக வாழ்வே புரியாத புதிர் தான்*

# வெற்றி விருட்சம்

விருட்சங்கள் அனைத்தும்
விதைக்குள் புதைந்திருக்கும்
சூத்திரம் அறிந்து
மனதுக்குள் விதைத்திடு
உன் வெற்றிக்கான விதைகளை!

எதிர்படும் தடைகளை
லாவகமாய் தகர்த்திட
விதை நோக்கி பாயட்டும்
தன்னம்பிக்கை நீர்ப்பெருக்கு!

உயிர்நிகராய் ஊட்டமளித்து
உயிர் வழியை பெருக்கிடும்
சூரியக்கதிரென பட்டுத்தெறிக்கட்டும்
புவி கண்டிராத
புத்தாக்க சிந்தனைகள்!

செயற்கை உரங்கள்
சுயமிழக்க செய்ய
இனிமை பயக்கும்
இயற்கை உரங்களென
ஊட்டமளிக்கட்டும் முயற்சியின் பலன்கள்.

களைகளைக் கண்டு
சோர்ந்திடாது தொடர்ந்திடு
திக்கெட்டும் கிளைபரப்பி
பசுமை போர்வை போர்த்தியபடி
வியாபித்து விருட்சிக்கும்
உனக்குள் விதைக்கப்பட்ட
வெற்றியின் விதை.

**கவிஞர் ச. கோபிநாத்**
சேலம்

# தற்கொலை

கடலைக் குடித்துவிட்ட பெருமையில்
கடலுக்குள் கத்திய தோறா
குடலுக்குள் அவிகிறது.

நிலவின் ஊத்தை கழுவ
பாழ்வளவில் குப்பை கிளறும்
ஒரு காகம்
வானத்திற்குப் பறக்கிறது.

நட்சத்திர நெல்மணி பொறுக்க
நாட்டுக்கோழிகள் நான்கு
நீண்ட நாளாய் தவிக்கின்றன.

காற்றைக் குடித்து முடித்து
உலகை அழிக்க
தவளை ஒன்று முயற்சி
மலையை தூக்கி கடலில் எறிய
நத்தை ஒன்று பயிற்சி.

பொறுக்க முடியாத
சூரியன் பகலை விழுங்கி
சந்திரன் இரவை விழுங்கி
கிழக்கிலும்
மேற்கிலும்
தற்கொலை செய்கின்றன.

ஜே.வஹாப்தீன்

# தேவதையின் வெதுவெதுப்பு

பூவின் இதழ்கள் குச்சமாய்
நீர்வீழ்ச்சிச் சாரல் விரிந்து வண்ணமாய்த் தெறிக்க
வானை நிறைத்ததே புன்னகை ஓவியம்
வனத்தின் அடர் நிழல் இருட்டை
விழுங்கும் மிளிரொளித்
தூரிகையுடன் அவள்
இதெல்லாம் உன்
தேவதைத்துவத்துக்கே சாத்தியம்
என்றேன் வியந்த விழிகள் இமை மூடாது
இது வனமில்லை
புன்னகையின் பிரம்மாண்டத்தை நீ
உணர்கிறாய்
என்னுள் தேவதை
உன் தரிசனம்
என்று என் முட்டியைத்
தொட்டாள்
தேவதையென்றால் உன்
வலிக்கு மருந்திட்டிருப்பேனா?
வலியை விலக்கியிருக்க மாட்டேனா?
உன் அறையின் சுவர்
தாண்டும் அவதானிப்பு
உனது
என்னுள் நீ காண்பவையால்
நான் பூரணமாய்
உன்னவள்
உன் கலை
உன் மென்மை அருகாமை
இவையும் கடந்து
ஒன்றே தான்
நீயாய் நிற்கிறது
என்று அவள் பதிலைத் தேடினேன்
அவள் கட்புலனுக்குள் இல்லை
தூக்கம் தொலையும்
ஊசி இரவில்
குரலாயில்லாமல்
அந்த ஒன்று எது
என்று வியந்து வினவினாள்
எந்த நொடியும்
உணரப்படும்
உன் அணைப்பின்
வெதுவெதுப்பு



- சத்யானந்தன்

# வாழ்க்கை ஒரு வட்டம்

ஒரு ஊரில் ஒரு குயவன் அவன் தாய், மனைவி, மற்றும் மகனுடன் வாழ்ந்து வந்தான். குயவனின் மனைவிக்கு அவளது மாமியாரைப் பிடிக்கவில்லை. அவரை வீட்டை விட்டு வெளியே அனுப்பத் துணிந்தாள். குயவனை தினமும் நச்சரித்தாள். அவனது அம்மாவை பக்கத்தில் ஒரு வீட்டில் குடியமர்த்தும் படி சொன்னாள்.

வெகு நாட்கள் குயவன் அவள் சொன்னதை காதிலேயே போட்டுக் கொள்ளாமல் இருந்தான்.

மனைவி விடாமல் நச்சரித்தாள். அவனது அம்மாவிற்குத் தனியாக இருந்தால் ஒரு குறையும் வராது என்றும், அவரது சாப்பாட்டுத் தேவையைத் தான் கவனித்துக் கொள்வதாகவும் சொன்னாள்.

ஒரு நாள் குடியானவனுக்கு நச்சரிப்புத் தாங்க முடியவில்லை. அம்மாவைப் இருபது அடி தள்ளியிருந்த ஒரு வீட்டில் குடியமர்த்தினான். மனைவி மாமியாரிடம் குயவன் செய்த தட்டு ஒன்றைக் கொடுத்து, வேளா வேளைக்குத் தன் வீட்டுக்குத் தட்டை எடுத்து வந்தால் அதில் உணவு நிரப்பித் தருவதாகவும், அதை மாமியார் அவர் வீட்டுக்கு எடுத்துச் சென்று மகிழ்ச்சியாகச் சாப்பிடலாம் என்றும் கூறினாள்.

மாமியாருக்கு இது அவமானமாகத் தோன்றினாலும், தன் மகனுக்காக வாயைத் திறக்காமல் மருமகள் சொன்ன வழியில் வாழ்ந்து வந்தாள்.

பேரனுக்குப் பாட்டி வீட்டை விட்டுப் போனது அறவே பிடிக்கவில்லை. அவன் அம்மாவுக்குத் தெரியாமல் சில சமயம் பாட்டி வீட்டிற்குச் சென்று விளையாடுவான்.


அவன் வளர வளர குயவன் மண்பாண்டம் செய்வதைக் கூர்ந்து கவனிக்க ஆரம்பித்தான். சில சமயம் குயவன் வேலை செய்யாத போது அவனது இயந்திரத்தை மகன் இயக்கிப் பார்க்க ஆரம்பித்தான். ஒரு நாள் மகனுக்கு அப்பாவைப் போலவே மண்பாண்டம் செய்ய வந்தது. மிகச் சிறு வயதிலேயே அவன் அப்பாவின் தொழிலைக் கற்றுக் கொண்டான்.

அவன் முதல் முதலில் தன் அம்மாவுக்கு அருமையான தட்டு ஒன்றைச் செய்தான். அதை அவன் அம்மாவிடம் கொடுத்த போது அவள் மகனின் திறமையை நினைத்து பெருமைப் பட்டாள். தனக்கு அவன் முதலில் பொருள் செய்து கொடுத்ததை எண்ணி அளவில்லா மகிழ்ச்சி அடைந்தாள். தனது சிறிய மகனை இவ்வாறு கேட்டாள்: “மகனே! நீ செய்த தட்டு மிக அருமை. எனக்கு மிகவும் பிடித்திருந்தது. எத்தனையோ பாண்டங்கள் இருக்கும் போது ஏன் எனக்கு ஒரு தட்டைச் செய்து தர வேண்டும் என்று உனக்குத் தோன்றியது?”

மகன் குழந்தைத் தனமாகச் சொன்னான்: “அம்மா! ஒரு நாள் நான் அப்பாவைப் போலக் கல்யாணம் செய்து கொள்வேன். அப்போது நீ பாட்டியைப் போல பக்கத்து வீட்டுக்குப் போய் விடுவாய் அல்லவா. அப்போது உனக்கு என் மனைவி தினமும் சாப்பாடு கொடுக்க ஒரு தட்டு வேண்டுமல்லவா! அதைத்தான் உனக்கு நான் இப்போது செய்து கொடுத்தேன்”

வாழ்க்கை ஒரு வட்டம். இன்று நீ பிறர்க்கு செய்வதை நாளை பிறர் உனக்கு செய்வார்கள். இதுவே உண்மை

# புள்ளிகளும் கோலங்களும் !



எம் . ஜெயராமசர்மா, மெல்பேண்; அவுஸ்திரேலியா

வெள்ளை மனத்தினிலே கறுத்தப்புள்ளி வந்துவிட்டால்
வினையாவும் குடிபுகுந்து விட்டதென நாம்நினைப்போம்
புள்ளியினால் கோலங்கள் மாறுவதைக் கண்டுவிட்டால்
நல்லபுள்ளி வருவதற்கு நாம்முயற்சி செய்துநிற்போம்!

புள்ளியினால் கோலங்கள் புறப்பட்டு வந்துநிற்கும்
புள்ளியது பிழைத்துவிடின் அலங்கோலம் ஆகிவிடும்
புள்ளியினை நாமென்றும் எள்ளிநகை யாடிவிடின்
நல்லகோல மெல்லாமே நரகலோக மாகிவிடும்!

நல்லவராய் இருப்போரை நல்லபுள்ளி எனவழைப்போம்
வல்லவராய் இருப்போரும் நல்லபுள்ளி ஆகிடுவார்
சொல்லவல்ல விஷயமெல்லாம் நல்லபுள்ளி பெற்றுவிடும்
நல்லபுள்ளி நிறைந்துவிடின் நன்மையங்கே குவிந்துவிடும்!



எழுத்துக்குப் புள்ளிவைத்தால் மெய்யெழுத்தாய் மிளிர்ந்துவிடும்
இழுக்குடைய செயல்செய்தால் மெய்மையங்கே அழிந்துவிடும்
புள்ளிவைத்த மானைத்தான் யாவருமே விரும்பிடுவார்
கள்ளநிறை நரியதனை காதலிப்பார் யாருமுண்டோ!

புள்ளியது இடம்மாறின் கோலமெல்லாம் மாறிவிடும்
கரும்புள்ளி செம்புள்ளி காறியே உமிழவைக்கும்
நெற்றியிலே வைக்கும்புள்ளி வெற்றியினைக் காட்டிநிற்கும்
நற்றமிழில் புள்ளியது நவின்றுவிடும் இலக்கணமே!




ஏட்டினிலே புள்ளிவைத்தால் எல்லாமே கிழிந்துவிடும்
புள்ளியில்லா எழுத்தினிலே தெள்ளுதமிழ் வளர்ந்ததுவே
பிற்காலப் பெரும்புலவோர் புள்ளியினைத் தான்புகுத்தி
இக்காலத் தமிழெழுத்தை எமக்களித்தார் ஏற்றமுடன்!

பொட்டென்னும் பேரினிலே புள்ளிவைப்பார் தமிழ்மக்கள்
கட்டழைக் காட்டியது களிப்பினையே நல்கிநிற்கும்
மங்கலத்தைக் காட்டுதற்கு குங்குமத்தைப் பொட்டுவைத்து
சந்தனமும் சேர்த்திடுவார் சந்தோஷம் கூடிவரும்!

பெரும்பணத்தைக் கொண்டாரை பெரும்புள்ளி எனவழைப்போம்
அரசியலில் பெரும்புள்ளி அனைத்தையுமே அள்ளிவிடும்
பெரும்புள்ளி பலபேரும் பேயாட்டம் ஆடிடுவார்
புள்ளியது பெயராலே புரட்சியே வெடித்தும்விடும்!

வாசலிலே கோலமிட்டு மங்கலத்தைக் காட்டிடுவோம்
மாக்கோலம் பூக்கோலம் வகைவகையாய் போட்டிடுவோம்
புள்ளிவைத்துக் கோலமிடும் புள்ளிமானைக் குறிபார்க்கும்
நல்லபுள்ளி கெட்டபுள்ளி நாமறிந்தால் நல்லதன்றோ!

நல்லபுள்ளி நல்லகோலம் நலம்பயங்கும் யாவருக்கும்
அல்லல்தரும் புள்ளியினால் அவதூறே வந்துநிற்கும்
புள்ளியினைத் தேர்ந்தெடுத்து புதுக்கோலம் அமைத்திடுவோம்
நல்லதெல்லாம் எம்வாழ்வில் அமைந்துவிடும் புள்ளியினால்!



# தப்பாப் போன கணக்கது



வானம் பார்த்த பூமி யடா
வாழும் எங்கள் தேச மடா
நானும் அதிலோர் அங்க மடா
நாய் படும்பாடே நாங்க ளடா

கம்பு சோளம் கேழ்வரகு
காணம் உழுந்து தட்டைப் பயறு
வீம்புக்கு உழுதே வெதச்சோம்
வீணாப்போச்சு வெளையாமே

மாதம் மும்மாரி பொழியுமாமே
மழை யென சொல்லி வச்ச காலம்
மலையேறிப் போச்சு தடா
மானங்கெட்ட பிழைப்பே ஆச்சு தடா

எப்ப வருமோ மழை யென
அப்போது வெதைப்போம் விதை யென
தப்பாப் போன கணக்கது
இப்பவாவது சரியென ஆகுமோ

வாழ நெனக்கிறோம் முடியல்லை
தேட நெனைக்கிறோம் கிடைக்கலை
வாழவும் முடியாமே சாகவும் முடியாமே
தெருவிலே கிடக்கிறோம் குப்பையா. ...

கவிஞர்
பொற்பனைசுப்பிரமணியன்

ஒட்டன்சத்திரம்

# இணைந்த வாழ்க்கை

விஜயகுமார் வேல்முருகன்

நல்ல கட்டுமஸ்தான உடல், அதற்கேற்ற உடை. கையில் ஒற்றை மலருடன் உதட்டில் மலர்ந்த புன்னகையுடன் கடற்கரையின் மணற்பரப்பில் உட்கார்ந்திருந்தான் அருண்..

பார்வை கடல் அலையில் விளையாடிடும் சிறுவர்கள் மீதும், அவர்கள் விரட்டிடும் நண்டின் மீதும்.. சிறிது நேரம் நினைவில் மூழ்கினான்..

இதே கடற்கரையில் நான்கு வருடங்களுக்கு முன்பு..

மாலதி மற்றும் அவளுடைய சித்தப்பா மகனும் அருணின் நண்பனுமான திலக், அருண் மற்றும் திலக்கின் அப்பா அம்மா சில நண்டு சிண்டுகளுடன் ஆட்டம் கடல் ஆலையில்..



மாலதியும், அருணும் விரட்டி விரட்டி திலக்கின் மீது கையில் அள்ளிய கடல்நீருடன் மணலை அடித்து விளையாட்டு...

இடை இடையே இருவரும் இடித்து இடித்து விழுவது...

ஆனந்தமாக இருந்தது அருணுக்கு...

மாலதி, தனது கல்லூரி விடுமுறையை கழிக்க, எப்பொழுதும் திலக் வீட்டிற்கு வந்துவிடுவாள்... அருண் திலக் வீட்டின் பக்கத்து வீடு...

அதனால் இவனுக்கும் பழக்கம்..

அவள் அடிக்கும், லூட்டிகள், கள்ளமில்லாத பேச்சு, குறுகுறுப்பான சிரிப்பு இதனால் அருண் மனதில் வளர்க்க ஆரம்பித்தான் காதலை...

யாரிடமும் சொல்லியதில்லை..

மாலதி விடுமுறையில் வரும் நாட்கள் அனைத்தும் அருணுக்கு தென்றல் வீசும் வசந்த நாட்கள்..

கல்லூரி சென்றுவிட்டால் இவனுக்கு நரகமாக நகரும் நாட்கள்... இடையிடையே அவள் திலக்கிற்கு செய்யும் தொலைப்பேசி அழைப்பால் இவனும் சற்று இளைப்பாருதல் அடைவான்..

அவள் சும்மாவே தேவதை போல இருப்பாள்.. அதுவும் வண்ண ஆடைகள் அடைந்தால் இன்னும் அதிகமாக கவர்வாள்..

## மழை வருமா?

வானம் பொய்த்து விட்டது
அப்படியே மழை பொழிந்தாலும்
தேக்கி வைக்க இடமின்றி
வீணாக கடலுக்கு போகிறது
அணை கட்டி தேக்கிவைத்த
அடுத்த மாநில மக்களுக்கு
திறந்து விடும் எண்ணமில்லை.
வெடித்துத்போனது நிலம் மட்டுமல்ல
எங்களின் நெஞ்சங்களும் தான்.
வற்றியது கிணத்தடி நீர் மட்டுமா
எங்களின் கண்ணீரும் தான்.
தினந்தினம் சிந்திடும் குருதியில்
விளைந்திடுமோ எங்கள் பூமி!

ஆ. முகைதீன் பிச்சை

அதை தனது வண்ண ஓவியமாக வரைந்து தன் பீரோவில் வைத்து பார்த்து பார்த்து ரசித்து வருவான்..

அவள் விடுமுறையில் அங்கு வரும் போதெல்லாம் அவனது காதல் அதிகரித்துக் கொண்டே சென்றது.. அதை அவன் நண்பனிடம் கூட சொல்லவில்லை...

சிலநேரம் அவளிடம் நேரடியாகச் சொல்ல செத்து செத்து பிழைப்பான்..

தொலைப்பேசியில் சொல்லலாம் என்றால் வார்த்தைகள் தந்தியடிக்கும்.. ஓரிரு முறை உளறலாக சொல்லியுள்ளான்.. அவளின் குறும்பு பார்வையால் பார்த்து முறைத்து விட்டு சென்றுவிட்டாள்.

இப்படியே மூன்று வருடங்கள் கழிந்தது..

சென்ற வருட விடுமுறைக்கு அவள் வரவில்லை.. அதை அவனால் தாங்க முடியவில்லை.. திலக் வீட்டிற்கும் அவ்வளவாக தொலைப்பேசியின அழைப்பும் இல்லை..

கடைசியாக அவள் தொலைப்பேசியில் சொன்ன பொழுது சிரித்து விட்டே இணைப்பை துண்டித்துவிட்டாள்..

திடீரென்று, இரண்டு நாட்களுக்கு முன்பு மாலதியே போன் செய்தாள். முடித்ததும் அருணுக்கு கைகால் ஓடவில்லை ஒரே கும்மாளம். ஆட்டம்பாட்டம். அதனோட விளைவாக ஒற்றை மலருடன் கடற்கரையில் காத்திருப்பு..

எங்கிருந்தோ வந்த பிள்ளைகள் விளையாடும் பந்து அவன் மேல் பட்டதும் நிகழ்காலத்திற்கு வந்தான்...

அந்த பந்தினை எடுத்து பிள்ளைகளிடம் தள்ளிவிட்டு திரும்பி பார்க்க.. வெள்ளை நிற சுடிதாரில் மாலதி வந்துக்கொண்டு இருந்தாள். மனது லேசானது... மனம் இறக்கை கட்டி பறந்து அவனை உயரத்தில் தூக்கிச் சென்றது...

அவளிடம், முகத்தில் முன்பிருந்த பொலிவு இல்லை. அந்த குறுகுறுப்பு பார்வையில்லை, எப்பொழுதும் வசீகரிக்கும் புன்னகை இல்லை. இறக்கை கட்டி பறந்த மனது அவனை பொத்யுதெற்கு மணலில் போட்டதாய் ஒரு உணர்வு..

“ஹாய்.. அருண்.. எப்படி இருக்கீங்க?” என்ற பேச்சில் ஒரு கலகலப்பு இல்லை..

ஏதோ வார்த்தைகளை வலிய இழுத்து பேசுவதைப்போல் பேசினாள்... ஏதேதோ பேசினால் சுவாரசியமின்றி.. அதில் தான் வேிதவையு ஆனதை சொன்னதும் அதிர்ச்சியில் இதயம் நொறுங்கிப் போனதைப் போல உணர்ந்தான். அதை வெளிக்காட்டாமல் அவள் முகத்தையே பார்த்துக்கொண்டு நின்றான்

போன வருடம் அவளது அப்பாவுக்கு திடீர் உடல்நலக் குறைவு ஏற்பட்டதாகவும், அதனால் அவளுக்கு உடனே திருமணம் செய்து பார்க்க வேண்டும் என்று அவர் விருப்பப்பட்டதாகவும் சொல்லி சொந்தக்கார பையனை பார்த்து அவசர அவசரமாக கட்டி வைத்ததாகவும், துரதிர்ஷ்டவசமாக திருமணமான சில தினங்களிலேயே அவள்

கணவன் இறந்ததாகவும் சொல்லி குலுங்கி குலுங்கி அழ..

மனம் மறுபடியும் இறக்கைகட்டி பறக்க.. அருணும் அழ அவன் கண்களில் புன்னகையுடன் ஆனந்தக் கண்ணீர் அதை மறைத்துக்கொண்டு, மோலதி.. அழாதிங்க.. இதோட வாழ்க்கை முடியப் போறதில்ல.. இன்னும் இருக்கு.. முடிஞ்சத நினைச்சி வருத்தப்படுறதுல ஒன்னும் ஆகப்போறதில்லயு

அருண் சொன்னதும்... “ம்ம்ம்.. சரிங்க அருண்.. அப்பறம் சொல்லுங்க .. உங்களுக்கு எப்ப கல்யாணம்“ என்று தன் கண்களை துடைத்தபடி மாலதி..

“பொண்ணெல்லாம் பார்த்தாச்சு. அவங்க சம்மதம் கிடைச்சவுடனே கல்யாணம் தான்”

“ஆகா.. அப்படியா.. ம்ம்ம்.. யாரந்த அதிர்ஷ்டசாலி”

‘‘மாலதி.. உங்க கிட்ட ஒ..ஒன்..னு சொல்லனும்“ என்று வார்த்தைகள் மீண்டும் தடுமாற.. இருந்தாலும் தைரியத்தை வரவழைத்து..

“நான் உங்கள காதலிக்கிறேன்.. உங்கள கல்யாணம் செஞ்சிக்க விருப்பப்படுறேன்... நீங்க தான் அந்த அதிர்ஷ்டசாலி.. பிளீஸ் மறுத்துடாதிங்க.. நான் உங்கள 12 ம் வகுப்பு லீவுல வந்ததுல இருந்து காதலிக்கிறேன்..” தன் காதல் கதையை சொல்லி தன் கையிலிருந்த ஒற்றை மலரை அவள் கைகளில் வைத்து தன் கைகளால் அழுத்த.. அழுகையும் சிரிப்புமாக அருணின் நெஞ்சில் முகம் பதித்து குலுங்கினாள்...

சற்று தூரத்தில் இரண்டு புறாக்கள் வானில் சோடியாக வட்டமடிக்க..

கடற்கரை மணலில் அருணும் மாலதியும் தங்கள் கரங்களை பிடித்து நடந்து செல்கின்றனர். புதிய காதல் வாழ்வினை நோக்கி...

சமமாக இருக்க
அனுமதி மறுக்கிறார்கள்
தராசு.

காய்ச்சல் சரியானது
பள்ளி பேருந்து சென்றபின்
குழந்தைக்கு

அரசமரத்தை சுற்றினாள்
அன்னக்கொடி தினமும்
இலையை பறிக்க!!

தேர்வு முடிவுகள் வெளியாயின
பதறவில்லை பாண்டியன்
பரிட்சையே எழுதாததால்!

தெய்வங்கள் வரிசையில் நின்றன
தூக்கத்தில் சிரிப்பு காட்ட
குழந்தைக்கு.

வீட்டுப்பாடம் சரியில்லை
திட்டினார் ஆசிரியர்
குழந்தையின் அப்பாவை!?

மனக்கவலை மறந்தது
பொம்மை ஊசியால்
குழந்தை போட்டவுடன்!

பள்ளி பதிவுகள்
நூறு சதம்
மதிய உணவின் மகிமையால்.

செலவில்லாமல் கூட்டிச்சென்றாள்
குடும்பத்தை பட்டணத்திற்கு
மகளின் தீப்பெட்டி ரயிலில்.

அசையாமல் கிடந்தார் அப்பா
மகன் சுட்ட பெருமையில்
பொம்மை துப்பாக்கியால்.

*கவிஞர் பாலக்கிருட்டிணன்*
(துபாயிலிருந்து)

# தயக்கம்

உன்னை வீழ்த்தக் கூடிய ஒரே ஆயுதம் உன்னுடைய தயக்கம். உன்னிடம் தயக்கம் இருக்கும் நொடிவரை உன் வாழ்வில் நீ எதையும் சாதிக்க முடியாது. உனக்குள் என்னக் குறையைக் கண்டாய் நீ தயக்கம் கொள்ள. உன் தயக்கத்திற்கான மூலக்காரணத்தைத் தேடு, உன் தயக்கத்துக்கு காரணம் தான் என்ன என்று. தயக்கத்தின் காரணமாய் விலகி நிற்பவர்கள் வெல்லுவ தில்லை. வெல்ல நினைப்பவர்கள் விலகுவ தில்லை.

தயக்கத்தின் காரணமாய் ஒரு நொடிப் பொழுதில் தன்னுடைய உலகம் போற்றும் வெற்றியை இழந்த எட்வின் சி.ஆல்ட்ரின் பற்றி எத்தனை பேருக்குத்தான் தெரியும். எட்வின் சி.ஆல்ட்ரினுக்கு கிடைத்திருக்க வேண்டிய பெயரும் புகழும் தான் நீல் ஆம்ஸ்ட்ராங்கிற்கு கிடைத்தது. நீல் ஆம்ஸ்ட்ராங் தான் நிலவில் முதன் முதலில் கால் வைத்தவர். ஆனால், முதலில் கால் வைத்திருக்க வேண்டியவர் எட்வின் சி.ஆல்ட்ரின். இவர்தான் நிலவுக்குச் சென்ற அப்பல்லோ விண்கலத்தின் Pilot. அதாவது விமானி.

ஆல்ட்ரின் அமெரிக்காவின் விமானப் படையில் பணிப்புரிந்தவர். மேலும் விண்நடை அனுபவம் உள்ளவர், அதனால் தான் அவர் பைலட்டாக நியமிக்கப்பட்டார்.

நீல் ஆம்ஸ்ட்ராங் அமெரிக்காவின் கப்பல் படையில் வேலை பார்த்தவர். மிகுந்த தைரியசாலி என்பதால் தான் இந்த பயணத்திற்கு இவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் நிலவுக்குச் சென்ற அப்பல்லோ விண்கலத்தின் Co-Pilot அதாவது இணைவிமானிதான். இவர்கள் சென்ற அப்பல்லோ விண்கலம் நிலவை அடைந்ததும் Pilot First என்ற கட்டளைப் பிறப்பிக்கப்பட்டது. ஆனால், ஆல்ட்ரினுக்கு மனதில் சின்ன தயக்கம். இடது காலை எடுத்து வைப்பதா அல்லது வலது காலை எடுத்து வைப்பதா என்றல்ல.

நிலவில் முதன் முதலாக கால் எடுத்து வைக்கிறோம். புவி ஈர்ப்பு விசையற்ற இடத்தில் இருக்கின்றோம். கால் வைக்கும் இடம் எப்படிப்பட்டதாக இருக்கும் என்றுத் தெரியாது. புதை மணலாக இருந்து உள்ளே இழுத்துவிட்டால்ஞ் எரி மணலாக இருந்து சுட்டுவிட்டால்... என மணிக்கணக்காக தாமதிக்கவில்லை. சில நொடிகள் தான் தாமதித்திருப்பார். அதற்குள் நாசாவில் இருந்து இரண்டாவது கட்டளை பிறப்பிக்கப்பட்டது. Co-Pilot Next என்று.

நீல் ஆம்ஸ்ட்ராங், ஆல்ட்ரினை போன்று தயங்கவில்லை. கட்டளை பிறப்பித்த அடுத்த நொடி காலடி எடுத்து வைத்தார். உலக வரலாறு ஆனார். உலக வரலாறு ஒரு நொடித் தயக்கத்தில் மாற்றி எழுதப்பட்டது. திறமையும், தகுதியும், வாய்ப்பும் இருந்தும் கூட தயக்கத்தின் காரணமாக தாமதித்ததால் இன்று ஆல்ட்ரினை யாருக்கும் தெரிவதில்லை.

முதலாவது வருபவரைத் தான் இந்த உலகம் நினைவில் வைத்திருக்கும் என்பது மட்டுமல்ல...

**ச. ஜெர்லின் பிரீமா**

தயக்கம், பயம் இவை எந்த அளவுக்கு நம் வெற்றியை பாதிக்கும் என்பதற்கு இதுவே உதாரணம்.

ஒரு நிமிடத் தயக்கம் நம்முடைய மிகப் பெரிய வெற்றிகளை தடுத்து தோல்வியாளனாய் மாற்றுகின்றது. நாம் அனைவருமே சாதனை களை படைக்க வல்லமை உடையவர்கள் தான். உனக்கென ஓர் உலகம் இருக்கிறது. அது உன்னை வெளிச்சத்திற்கு வா என அழைக்கின்றது. வெற்றிக்கு தேவையெல்லாம் இலக்கும் அதனை நோக்கிய பயணமும் மட்டும் தான். சோம்பலும், தயக்கமும் அல்ல.

நம்முடைய தயக்கத்திற்கு காரணமாக எது இருக்கின்றது என சற்றே சிந்தித்துத்தான் பாருங்களேன். அப்படி நீங்கள் சிந்தித்தீர்கள் என்றால் அச்சமும், கூச்சமும் தான் முதல் காரணமாக இருக்கும்,

சாதனை படைக்க தயக்கம் கொள்ளாதே,
அச்சத்தையும்,
கூச்சத்தையும் தூக்கி எறிந்துவிடு!
சாதனைகள் புரிந்திடு!

**- நௌஷாத் கான்.லி**

எங்க அண்ணன் மகன் எப்படி இருக்கான் டாக்டர் ??

NOW ALRIGHT... ஆனா...?

என்னங்க டாக்டர் ஆச்சு ?

HE IS FINE NOW... ஆனா அந்த ஆக்சிடண்ட்டாலே பழைய ஞாபகங்கள் சுத்தமா போயிருச்சு. பழைய நினைவுகள் திரும்ப வர்றது சான்சே இல்லை. அப்பா அம்மா அத்தை, மாமா ன்னு எல்லா உறவு முறைகளும் ஞாபகம் இருக்கும் ஆனா அவன் வாழ்க்கைல நடந்த விஷயம் மட்டும் அவன் மூளையிலிருந்து எரேஸ் ஆகி இருக்கு ...

மத்த படி EVERYTHING IS OK ...



# அத்தை முகம் மறந்து போச்சே...

வினோத் மஹாலட்சுமியோட அண்ணன் பையன். சின்ன வயசிலேயே அப்பா - அம்மாவை ஒரு விபத்துல இழந்தவன். கோடி கணக்கான சொத்துக்கு ஒரு வாரிசு. தன்அண்ணன் மகனை சொந்த மகன் போல் செல்லமாக வளர்த்தாள். ஆனால், தன்னுடைய ஒரே மகளை வினோத்துக்கு திருமணம் செய்து வைக்க வேண்டும் என்பதில் மட்டும் வைராக்கியமாய் இருந்தாள்.

சமீபத்தில் வினோத்துக்கு நடந்த ஆக்சிடண்ட்டை நினைத்து ரொம்பவும் கவலை பட்டாள். அவனுக்கு எதுவும் ஆகவில்லை என்று தெரிந்த பிறகு தான் கொஞ்சம் சமாதானம் ஆனாள். விபத்துக்கு பிறகு வினோத்தின் நடவடிக்கைள் ரொம்பவும் மாறி விட்டன. கலகலப்பாக இருந்த பையன் ரொம்ப அமைதியாக மாறி போனான்.

ஒரு சில மாதங்களுக்கு பிறகு...

வினோத் உன்கிட்டே தனியா பேசணும்...

சொல்லுங்க அத்தை

என் பொண்ணு திவ்யாவை உனக்கு கல்யாணம் செய்து வைக்க நினைக்குறேன். அவளுக்கும் படிப்பு முடிச்சிருச்சு. அடுத்தவாரம் அமெரிக்காவுல இருந்து வர்றாப்பா. நீ என்ன சொல்லுற, வினோத் ...

அத்தை... உங்க பொண்ண கட்டிக்கிடணும்னு தான் எனக்கும் ஆசை. ஆனா என்னை ஒரு பொண்ணு ரொம்ப டிஸ்டர்ப் பண்ணுறா அத்தை .

(மஹாலட்சுமி கொஞ்சம் அதிர்ச்சி

அடைந்தவளாய் )

என்னப்பா சொல்லுற ,நீ யாரையாவது லவ் பண்றியா? யாரு பொண்ணு? என்ன பண்ணுறா? என அடுக்கடுக்காய் மஹாலட்சுமி கேள்வி கேட்டாள்.

லவ் எல்லாம் உன்கிட்டே சொல்லாம பண்ணுவேனா அத்தை.

யாருன்னுன்னே தெரியல? கனவுல வந்து ரொம்ப டிஸ்டர்ப் பண்ணுறா அத்தை.

மனசுக்குள் மஹாலட்சுமி சந்தோசப் பட்டு கொள்கிறாள்.

யாருண்னே தெரியாத கனவுல வர்ற ஒரு பொண்ணுக்காக கல்யாணத்தையே வேணாம்னு சொல்றியே, இது நல்லாவா இருக்கு வினோத்?

கனவோ? நிஜமோ அவள நேர்ல பார்ப்பேன்னு நம்பிக்கை இருக்கு.

என் பொண்ணு ஊர்ல இருந்து வர்ற வரைக்கும் தான் உனக்கு டைம் வினோத். அதுக்குள்ளே அந்த பொண்ண கண்டுபிடிச்சிட்டா அவளையே உனக்கு கல்யாணம் பண்ணி வைக்கிறேன். இல்லைனா என் பொண்ணு திவ்யாவை தான் நீ கல்யாணம் பண்ணிக்கணும்.

சரிங்க அத்தை.

ஒரு வாரத்திற்கு பிறகு ...

தன் கனவில் வந்த காதல் தேவதையை ஓவியமாய் வரைந்து தன் அத்தையிடம் காட்டினான். அந்த புகைப்படத்தை கண்டதும் மஹாலட்சுமி அதிர்ச்சியடைந்தாள்.

வந்த கோபத்துக்கு வினோத் கன்னத்தில் பளாரென்று அறைந்தாள். அறைந்த வேகத்துக்கு

# ‘தமிழ் நெஞ்சம்’

அன்பு தெரிகிறது உன் முகமலர் நோக்கில்
ஆனந்தம் உரசுகிறது என் இதயத்தின் வாசலில்

இளமை புரிகிறது உன் இனிய சொற்களில்
ஈரம் பெருகிறது என் முடியகன்ற மண்டைவாழ் இயக்கத்தில்

உள்ளம் கனக்கிறது உன் பலன் வேண்டா கருமத்தில்
ஊக்கம் பிறக்கிறது என் ஊன் தாங்கும் உடலத்தில்

எளிமை காண்கிறது உன் பிரசன்னம் மாபெரும் சபைதனில்
ஏகாந்தம் அடைகிறது என் உள்ளம் இவ்வெளியில்

ஐந்தவி வாழ்கிறது உன் நெஞ்சில் ஒரு மூலையில்
ஒட்டுரிமை கேட்கிறது என் நெஞ்சம் உன் அறிவு-சாலையில்

ஓதல் வளர்கிறது உன் தமிழ் வாழும் இல்லந்தனில்
ஔவித்தல் தாக்கிறது என் நெஞ்சை சற்றுப் பொய்யில்



புதுநகர் செல்லத்துரை

அந்த புகைப்பட ஓவியம் கதவருகே சென்று விழுந்தது.

அறை வாங்கிய கன்னத்தில் அத்தையின் ஐந்து விரலும் படிந்திருந்தது.

ஏன் அத்தை என்னை அடிச்சீங்க ?

அத்தை தன் பர்ஸை திறந்து காட்டினாள். அதில் சிறுவயதில் அத்தை மாமாவுடன் இருந்த புகைப்படம். அதில் பட்டு புடவை கட்டியிருந்தாள். ஓவியமும் அத்தையின் புகைப்படமும் அச்சு அசலாய் இருந்தது.

சாரிங்க அத்தை. நீங்கன்னு சத்தியமா எனக்கு தெரியாது. என்னை மன்னிச்சிடுங்க. ப்ளீஸ் ... ப்ளீஸ் என கெஞ்சினான் வினோத்.

அட விடுப்பா வினோத். நீ, நான் தான்னு தெரியாம தானே வரைஞ்சே. நானும் உன்னை கோபப்பட்டு அடிச்சிருக்க கூடாது.

அப்போது கதவை திறந்து கொண்டு திவ்யா வீட்டிற்குள் வந்தாள். வந்த வேகத்தில் வினோத் வரைந்த ஓவியம் அவள் காலில் தட்டு பட்டது. அந்த ஓவியத்தில் வினோத்தின் கையொப்பமும் இருந்தது. அந்த ஓவியத்தை ஆசையாய் எடுத்து பார்த்தாள். பார்த்த வேகத்தில் ஓடி வந்து வினோத்தை கட்டி பிடித்து கன்னத்தில் மாறி, மாறி முத்தமிட்டாள்.

ஏன் மாமா, என் மேலே அவ்வளவு பாசமா? என்னை பார்க்காமலே இவ்வளவு தத்ரூபமாக வரைஞ்சு இருக்கீங்க. ஆனா ஒன்னு இதுவரைக்கும் நான் கட்டாத புடவையில வரைஞ்சு இருக்கீங்க. நான் எப்போதும் மாடர்ன் டிரஸ் தான் போடுவேன்னு உங்களுக்கு தெரியாதா?

anyway என்னை அழகா புடவையிலே வரைஞ்ச இந்த கைகளுக்கு ஆயிரம் முத்தங் கள்னு மாறி, மாறி முத்த மழை தன் மாமனுக்கு அன்புடன் கொடுத்தாள்.

வினோத்தும் அத்தையும் ஒருவரை ஒருவர் பார்த்து சிரித்து கொண்டனர்.

# பறத்தலின் வாழ்வு

*எத்திசையில் போய்*
*வாழ்வைத் தொடங்குவது*
*அலையும் சோகத்தில்*
*பறப்பதே அதன் வாழ்வு.*

*சொந்தமண்ணில் நிலைகொள்ள*
*கிளைகளுமில்லை*
*கூடுகளுமில்லை....*

*பசியாறவும் இளைப்பாறவும்*
*கதைக்கவும்கூட*
*வேறு மனங்களுமில்லை...*

*கிளைகள் வெட்டப்பட்டால்*
*இலைகள் துளிர்த்து பூக்கும்*
*சிறகுகள் வெட்டப்பட்டால்*
*துளிர்க்குமோ சிறகுகள்...*

*கருணையற்ற வாட்கள்*
*சிறகுகளைச் சிதைத்துவிட்ட*
*இந்த நாளிலும் கூட*

*ஏதிலிகளாய்*
*அதோ அந்தரத்தில்*
*தன் வாழ்வைத் தேடியலையும்*
*சிறகொடிந்த நிலையிலும்...*

*இன்னும்*
*எத்தனை காலமோ?...*

*பெண்ணியம் செல்வக்குமாரி*

# நெஞ்சே பேரழகு

பசுமையான கோங்குவேங்கை மரங்க ளோடு
　　பனிபடர்ந்த முகடுடனே மஞ்சு சூழ்ந்து
விசும்புதனைத் தொடுமளவு உயர்ந்து நின்று
　　விளைந்திட்ட தினையரிசி தொங்கும தேனும்
குசும்புசெய்யும் கரடிபன்றி மயிலும் வாழ்ந்து
　　குறிஞ்சியொடு காந்தளுமே அழகாய்ப் பூத்தே
அசுத்தமிலா சுனையருவ நீரைத் தந்தே
　　அரணாக இருந்தமலை போன தின்று !

அலைகளாக வந்துவந்து கரையைத தொட்டே
　　அழகுநீல வண்ணமுடன் மனத்தை ஈர்த்து
வலைகளோடு வருகின்ற மீன வர்தம்
　　வாழ்க்கையினை வளமாக்க மீன்கள் தந்து
குலையாத வீரமுடன் இராசேந் திரன்தான்
　　குவித்திட்ட வெற்றிக்குத் துணையாய் நின்று
கலையாத ஓவியமாய் இருந்த ஆழி
　　கசடுநிறை கொலைக்களமாய் ஆன தின்று !

விண்மீது ஏழுநிற வில்லைத் தோற்றி
　　விழிகளுக்கு விருந்தாக அழகைக் கூட்டி
மண்நோக்கிச சரம்சரமாய் பாய்ந்து வந்து
　　மலையருவி ஆறாகக் குளங்கள ஏரி
கண்மாய்கள் எனக்குளிர நீரைத் தேக்கிக்
　　கள்ளமில்லாச் சிறுவரெல்லாம கப்பல விடவே
பண்பாடி தவளையெல்லாம வரவேற் பளித்த
　　பாரியெனும் மும்மாரி போன தெங்கே !

பாவலர் கருமலைத்தமிழாழன்

# அச்ச அலைய்

சத்ய சர்வா

அது ஒரு வேலை நாள்... எனக்கு அலுவலகத்தில் பராமரிப்பு பணிகள் நடைபெறுவதால் இரண்டு நாட்கள் விடுமுறை விடப்பட்டிருந்தது.

அந்த இரண்டு நாட்களுக்கு பதில் இனிவரும் வார இறுதிகளில் வேலை வைத்து கணகச்சிதமாய் கணக்கு தீர்க்கப் படுமென்பது வேறு விசயம்.



காலைல எழுந்ததுல இருந்தே என் எட்டு வயது மகள் அப்பா இன்னைக்கு பீச்சுக்கு போகலாம்பானு ஒரே தொல்லை பண்ணி பள்ளிக்கு லீவும் போட்டுட்டா... அப்படி இப்படினு ஒரு பத்து மணிக்கா பீச்சுக்கு கிளம்பினோம் நானும் என் மகளும். என் மனைவி அலுவலகத்தில் முக்கிய வேலை இருப்பதாய் சொல்லி காலைலயே கிளம்பி விட்டாள்! அந்த வெயில் நேரத்துல பீச்ல கூட்டம் அவ்வளவா இல்லை.

“அப்பா ஐஸ் வாங்கி குடுப்பா”

“போகும் போது வாங்கி தர்றேன் செல்லம்‘

“போ பா... போகும் போது கடல்ல குளிச்சிருக்க ஜூரம் வரும்னு சொல்லுவ நீ” எட்டு வயதுக்கு மீறிய சிந்தனையுடன் பதில் கூறினாள்!

ரெண்டு சாக்கோபார் ஐஸ் அடம்பிடித்து வாங்கி ஒன்றை சாப்பிட்டு விட்டு மற்றொன்றை சாப்பிடாமலே கையில் வைத்துக் கொண்டாள்.

“இப்பவே எதுக்கு ரெண்டு வாங்கின போகும் போது ஒண்ணு வாங்கி சாப்பிட்டிருக்கலாமே”

“லூசாப்பா நீ அதான் அப்பவே சொன்னனே கடல்ல குளிச்சதுக்கப்புறம் நீ வாங்கி தரமாட்டே அதான் இப்பவே வாங்கிட்டேன்”

இடுப்பில் கையை வைத்துக் கொண்டு அழகாய் சொன்னதை எந்த

**கரு விழி**
**அசைத்து**

**செந்தமிழ்**
**மொழி**
**இசைத்து**



**காதல்**
**சொல்ல**
**வந்த**

**காரிகை**
**இவளோ...**

**எந்தன்**
**துயில்**
**கலைத்து**

**இதயத்தில்**
**நீங்காயிடம்**
**பிடித்த**

**இவள்**
**மன்மதன்**
**மகளோ.....**

ப்ரேம்குமார் பிரஜனா

தகப்பனாயிருந்தாலும் ரசித்திருப்பான்!

கடல் நெருங்குவதை கடல் அலையின் சத்தம் உணர்த்தியது!

எங்கெங்கோ சில தலைகள் மட்டும் தென்பட்டது!

அதில் இரட்டை தலைகள் ஒரு சுடிதாரின் மறைவுக்குள் ஏதோ ரகசியம் பேசியபடி... என் கையிலிருந்து ஏதோ விடுபட்டு போனதாய் உணர்வு வர என் மகளை தேடினேன்!

கடல் அலையின் ஆர்பரிப்பு சத்தம் அருகில் கேட்கவே ஆவலில் என் கையை உதறி முன்னால் ஓடிக்கொண்டிருந்தாள்!

“ஹேய் அம்மு ஓடாதே நில்லு...” நான் துரத்திக் கொண்டே ஓட அவள் நான் பிடித்துவிடுவேனோ என்று என்னை பார்த்து சிரித்தபடியே ஓடியவள் கரையில் ஓடி விழுவதற்கும் இராட்சத அலை ஒன்று வந்து அவளை இழுத்து செல்வதற்கும் சரியாய் இருந்தது!

சற்றுமுன் என் விரல் பிடித்து நடந்தவள் இப்பொழுது அலைகளின் நடுவே மறைந்து விட்டாள்!

அலைகளின் நடுவே ஓடி தேடினேன்... கதறினேன்...

அடுத்தடுத்து வந்த அலைகள் நடுவே புகுந்து விழுந்து எழுந்து நீந்த முடியாமல் மூச்சு முட்டியது!

நீண்ட நேர தேடலுக்குப்பின் என் மகளின் குரல்... “அப்பா...”

அவளேதான் கரையில் இருந்து கூப்பிடு கிறாள்!

நீந்தி உள்ளே வரும்போது பட்ட கஷ்டம் கரைக்கு திரும்பும்போது காணாமல் போயிருந்தது!

என் மகள்தான் கரையில் நின்று கூப்பிட்டுக் கொண்டிருந்தாள்!


நான் ஓடிச்சென்று அவளை வாரி அணைத்து முத்தங்களால் என் ஆதங்கத்தை தீர்த்துக் கொண்டிருந்த நேரம்... திபு திபுவென ஒரு கூட்டம் கடலில் இறங்கி நீண்ட தேடலுக்குப்பின் இரண்டு உடல்களை கொண்டுவந்து கரையில் போட்டனர்!

“ஐயோ பாவம்“ என்று சொல்லிக்கொண்டே அருகில் போய் பார்த்தேன்.

சடலங்கள் இரண்டும் அச்சு அசலாய் என்னை போலவும், என் மகளை போலவுமாய்...

மிச்சமிருந்த ஒரு சாக்கோபார் மெல்ல கரைந்து கடலில் கலந்தது என் மகள் ருசிப்பதற்காக!

# உடலோடு வாழும் வீடு அம்மா ..



நேரா நோன்பு சீராகாது
வாழும் வாழ்வே செய்தி
ஞான விலாசம் தாய்.

கலக்கினும் சேறாகாது கடல்
ஒன்றும் ஒன்றும் ஒன்றுதான்
எல்லா தாயும் புத்தர்போல .

தளரா வளர்தெங்கு தாய்
ஆகி ஆக்கிய இறைவி
உடலோடு வாழும் வீடு .

வீடு பெற நில்
தோன்றின் புகழொடு தோன்று
கோதிலா குறியீடு தாய்.

பாடறிந்து ஒழுகும் பிரசாதம்
கிழமைப்பட வாழும் சொரூபி
அது இதுவான தாய் .

கண்ணிரண்டு காணும் ஒன்று
எல்லார்க்கும் பெய்யு மழை
தானற்ற சற்குரு தாய்.

- *தஞ்சை தவசி*

# நாங்களும் அனாதைகள்

கவிதாயினி விஜி விஜயராணி



அழகான கூட்டில் அம்மை அப்பருடன்
வாழ்ந்தது ஒருகாலம்.

கண்ணயர்ந்த நேரத்தில் அவர்களை
அருகிலிருந்து பிரிந்தது ஒருகாலம்.

கனவுபோல் கலைந்தனர் எங்கள்
கண்களை படைத்தவர்கள்.

அடைக்கலம் தந்த மனதும் அசுரவேகத்தில்
சொர்க்கத்தில் இடம்பிடித்துவிட்டார்.

சொந்தங்கள் கண்களோ சுருங்கிவிட்டன.
சொத்துக்களின் விவரம் முடக்கப்பட்டன.

எங்கள் வாழ்வில் வசந்தம்வீசாதா?
இமைகளை விலக்கிப்பார்க்கின்றேன்
விடியலும் விடிந்ததாக தெரியவில்லை.

எங்கள் வாழ்க்கைக்கு விளக்கேற்ற
யாருக்கும் மனமில்லை.

பார்வையை வீசினால் பசுத்தோல்
போர்த்திய புலியும் பாசத்தை பொழிகிறது.

பெண்ணாய் பிறப்பதே பாவம் அதிலும்
அனாதையாய் வளர்வதே அதைவிட
நாங்கள் பாவம்.

விதைபோட்ட வீரபிரம்மாவே எங்கே
செல்லும் எங்கள் வாழ்க்கை எனும் பயணம்.!

# காதலி...

காதலில்லாத மனிதனைப் பார்த்து சிரித்தார்... அந்தச் சூஃபிக் கிழவன்.

கவலையுடன் அவரைப் பார்த்தான்.

இறக்கவேண்டிய இடத்தில் இறக்காமல் சுமைகளை தூக்கியே திரிகிறாயே என்றார்.

இறங்க மறுக்கிறதென்றான்.

தூக்கிச் சுமப்பவன்தான் இறக்க வேண்டும், கவலையிடம் காரணம் கேட்டால் பொய் தான் சொல்லும்.

சிரித்தவர் மீண்டும் சொன்னார்.

நீயொரு காதலிக்கத் தெரியாத முட்டா ளென்று.

காதலிருந்தால் கவலைகள் போகும் என் றார்.

ஆசைகளைக் காதலித்தேன் என்றான்...

கானல் நீரைக் குடித்தேன் என்கிறாயே என்று நகைத்தார்.

மனைவியைக் காதலி, குடும்பத்தைக் காதலி, வாழ்க்கையைக் காதலி, வனத்தைக் காதலி, அழகினைக் காதலி, எல்லையில்லாத காதலை எப்போதும் காதலி!


நான் இறைவனைக் காதலித்தேனே? என்றான்.

அடங்காமல் சிரித்தவர், அவன் படைப்பு களை நீ காதலித்தாயா? என்று கேட்டுவிட்டு நகர்ந்தார்....

மெல்ல இறங்கிக் கொண்டிருந்தது அவ னது கவலைகள் !

முகமதுபாட்சா

இராப்பாடிகளின் நாட்குறிப்பு
நூலாசிரியர் : தி. வினோதினி
விமர்சனம் : ஈழபாரதி






ஈழ்த்து படைப்புலகத்தின் பெண்களின் பங்களிப்பு குறைவாகக் காணப்பட்டாலும், சமகாலத்தில் பலர் எழுத முன் வந்து இருப்பது பெண்களின் இருப்பை அவர் களின் தனித்துவமான பார்வையை அறியக் கூடியதாக இருக்கும்.

அந்த வகையில் தனது முதல் கவிதைத் தொகுப்பை இராப்பாடிகளின் நாட்குறிப்பு என்ற தலைப்பில் தந்து இருக்கிறார் கவிதாயினி வினோதினி.

கவிதை என்பது வெறும் வரிகளால் நிறைந்த அழகியல் அன்று. அது உணர்ச்சிகளின் வெளிப் பாடு, இவரின் கவிதைகளிலும் காணக் கூடியதாக இருக்கின்றது. ஈழத்து படைப் பாளிகளிலிருந்து இன விடுதலையை, எழுச்சியை போர் பற்றிய ரணத்தை, வடுவை, வேதனையை பதிவு செய்தேத் தீரும். அது அந்த மண்ணின் வீரம்.

அழிந்துபோன எம்மவர் வீடுகளுமல்ல
காலத்தின் தழும்புகளால்
மாராத காயமான
ஆறாத வடுக்களவை (பக் 40)

ஈழத்தின் கடைசியுத்தம் என்பது 21ம் நூற்றாண்டின் பாரிய இன அழிப்பு என்பதை வரலாறு பதிவு செய்துள்ள

போதிலும், யுத்தம் நிறவடைந்த போதிலும் கவிஞரின் கேள்விக்கு விடை தெரியாமல் வாழ்விழந்து வாழும் சமூகம்... வழியிழந்து நிற்கிறது !

காணாமல் போனோரை
கண்டு கொள்ள வழியிழந்து
இன்றுவரைத் தேடுகிறோம்.

(பக் 40)

மறுவாழ்வு அளிக்கப்பட்டு இயல்பு வாழ்க்கைக்கு மக்கள் திரும்பிவிட்டார்கள் என்று அரசு கூறிவரும் நிலையில் வதை முகாம்களும், மீட்கப்படாத காணிகளும், காணாமல் போனோர் பற்றிய விபரம் இப்படி மக்களின் எதார்த்த வாழ்வினை, வலிகளை பதிவு செய்து இருக்கிறார் கவிஞர்.

உண்மையில் ஒருவர் இறந்துவிட்டாரா, உயிரோடு இருக்கிறாரா என்பது தெரியாமல் வாழ்வது வாழ்வினும் மிகக் கொடியது யுத்தம் நிரைவடைந்தபின் காணாமல் போன் தனது தந்தை திரும்பி விடுவார் என்று காத்திருக்கும் பிள்ளைகள், கணவரை எதிர்பார்த்துக் காத்திருக்கும் மனைவி இவர்களின் வாழ்வியல் சூழல் ஒவ்வொரு நாளும் ஏக்கத்தோடும், கவலைகளோடும் விடியும் பொழுது வாசல் கதவில் காத்து நிற்கும் குடும்பங்கள், இதைக் கண்டுக் கொள்ளாத அரசு, உலக தன்னார்வ அமைப்புகளைச் சாடுகிறார் கவிஞர்.

உன் நினைவுகளின்
நிழல்களால் நிரப்பப்பட்ட
இந்தக் கோப்பையில்
கடைசித்துளிக் கண்ணீர்
கரையும் பொழுதுகளில்
காலாவதியாகி போயிருக்கும்
இந்த காயம் (பக் 46)

கவிதையில் காதல் கலந்து விடுகின்றதா? இல்லை, காதல் கவிதையில் கலந்து விடுகின்றதா? தெரியவில்லை என்றாலும், காதலின் உணர்ச்சி வெளிப்பாடு கவிதையே என்பார்கள். கவிஞரின் இந்த வரிகளும் கவிதைக்குள் காதல் செய்கின்றன காற்றுவெளியிடையில்...

காற்றுவெளியிடையில்
உன்னோடு
காதல் செய்யவேண்டும்

(பக் 94)

கவிஞர் கவிதைகளை காதல் செய்கின் றார். அதனால் என்னவோ கவிதை வரிகள் எளிதாய் வசப்படுகின்றது அவருக்கு. கட்டுரை, சிறுகதை, மேடைப்பேச்சு என கலைத் துறையிலும் தன்னை அடையாளப் படுத்தி வரும் வினோதினி கவிதை உலகிலும் கால் பதித்து இருக்கிறார். இன்னும் கூர்மையான, செழுமையான வார்த்தைகளை உள்ளடக்கி எழுதி வந்தால் எதிர்கால ஈழப் பெண் படைப்பாளிகளின் வரிசையில் புதிய தளத்தில் தன்னை தக்க வைத்துக் கொள்ளும் எதார்த்த வரிகள் அவரின் கவிதைகளில் செரிந்து காணக் கூடியதாக உள்ளது. வாழ்த்துகளும், பாராட்டுகளும்!

வெளியீடு : மன்னார் தமிழ்ச்சங்கம், ஈழம்

விலை : 250 LNR

**ஈழத்தில் நூல் கிடைக்குமிடம்...**

**பூபாலசிங்கம் புத்தகசாலை**
**மற்றும்**
**ஸ்ரீலங்கா புத்தகசாலை**

**ஆன்லைனில் நூல் பெற...**

http://www.marinabooks.com/detailed?id=5+1632



# நுட்பம்

## சோலைவனம்

விலையுயர்ந்த முத்து
மதிப்பற்றுப் போகிறது
பிரிந்த போகும் சிப்பி..!

*- பைஸர் சுல்தான்*

அலையின் தாலாட்டு
அன்னை மடியில் துயில்கிறது
சிப்பிக்குள் முத்து..!

*- சதா முருகன்*

ஆயிரம் ஹைக்கூக்கள்
சேகரித்துச் சுமந்து வந்தது
சிப்பிக்குள் முத்து..!

*- நிர்மலா சிவராஜசிங்கம்*

ஆவென்று அழுகிறது
வெளியேறப் போகிறது
சிப்பிக்குள் முத்து..!

*- அபுல் ஹஸன்*

சிப்பிக்குள் முத்து
பளிச்சென்று இருக்கிறது
குழந்தையின் சிரிப்பு..!

*- பிறேம் குமார் பிரஜனா*

விதவைக்கு மறுவாழ்வு
மன நிறைவாய் கிடைக்கிறது
தியாகிக்கு ஒரு குழந்தை..!

*- தி. கி. கமலானந்தன்*

பிரகாசிக்கும் முத்துகள்
கவனிப்பாரற்றுக் கிடக்கின்றன
உருவாக்கிய சிப்பிகள்..!

*- ஆத்தூர் சாகுல்*

வாய் திறந்த சிப்பி
ஒற்றையாய் புன்னகைக்கிறது
முத்து..!

*- பட்டுக்கோட்டை பெ. மூர்த்தி.*

இறக்கும் தாய்
பிறக்கிறது குழந்தை
சிப்பிக்குள் முத்து..!

*முகம்மது அஸ்கி செம்மண் துறையூரான்*

சிப்பிகள் தருவதோ முத்து
கவிஞர் சிந்தனையில் பிறந்து வரும்
ஹைக்கூவாய் தமிழில் சொத்து..!

*- தமிழ்நெஞ்சம் அமின்*

பூரண நிலவு
மெல்ல குறைந்து வருகிறது
குழந்தை வயிறு

*- கு. ரசி*

கீழ் இறங்கும் ஒளி
மேலெழுந்து செல்கிறது
குறட்டை ஒலி

*- ராகவன் சிவதர்சினி*

பௌர்ணமி நிலவு
ஒய்வெடுத்து உறங்குகிறது
மின்மினிப் பூச்சி

*- இர. தர்மாம்பாள்*

கரடு முரடான நிலம்
வர்ணனைகளால் அழகேறுகிறது
நிலா

*- ர. பிரேம் ஆனந்த்*

அழுக்கு நீரினால்
வெகு அழகாய்த் தெரிகிறது
கரையோர கொக்கு.

*யுவபாரதி, கந்தகப்பூக்கள்*

மேலே பறக்குது கொக்கு
குளிரின்றி குளத்தில் நடுங்குது
மீன்

*கவி நுட்பம் பாயிஸா நௌபல்*

# "செழிக்கட்டும் பூமி"

பூமி தன்னை அழகாகவே
படைத்திடும் போதே பசுமையைச்
சேர்த்தே படைத்திட்டான் இறைவனவன்.

பசுமையின் தேவையை நன்றாகவே
புரிந்திட்ட இறைவனும் உயிரினங்கள்
உண்டிடவே சிலவற்றையும்.
உலகமதன் வேறுபல தேவைக்காய்
செடி கொடி மரங்களென அமைத்திட்டான்

மழைக்கும் காற்றிற்கும்
வெப்பத்தின் தணிப்பிற்கும்
மரங்களின் தேவை
மிகப்பெரும் சேவை.

தன்தேவை முன்னிறுத்தி
மரங்களையே அழித்தொழித்து
மீள்நடுகை நினைவின்றியே
சுயநலமாய் புவிமீது
வாழுகின்றான் மனிதனவன்.

மண்வளத்தைக் காத்துநிற்கும்
மரங்களையும் கணக்கின்றி
அகற்றுவதில் முன்னிலையில்
நிற்கின்றான் மனிதனவன்.

தேவைக்கு மரங்களையே
அழிப்பதையும் தடுத்திடவே
யாராலும் முடியவில்லை.
அழித்திட்ட மரங்களுக்கு
மாற்றீடாய் மற்றொன்று
நாட்டுதற்கு மனிதனவன்
அவ்வளவு முயல்வதில்லை.

மரங்களது அவசியத்தை
மனிதவன் சிந்தித்தால்
மண்ணிலவன் மரங்களையே
அர்த்தமற்று அழிப்பதையே
அடியோடு நிறுத்திடுவான்.

செய்தவற்றை மறந்துவிட்டு
மரங்களையே நடுவதற்கு
நாட்டமதை மனதிருத்தி
முயற்சிகளை முன்னெடுத்தால்
பசுமையோடும் பூமியதும்
செழிப்புற்று வந்திடுமே.

சேர்ந்திடுவீர் ஒன்றாகவே
நாட்டிடுவோம் மரங்களையே
பூமியதும் செழித்திடவே.

கலா வர்ணன்

எஸ்.எஸ்.எம்.றபீக்

# "செழிக்கட்டும் பூமி"

நட்டமரம் கிளை விட்டுச் செழிக்க
விட்டுப் போகும் வரட்சி பூமியில்
தொட்டுத் தழுவும் சுவாசக் காற்றில்
பட்டுப் போகும் துயரம் யாவும்,

எட்டி வைக்கும் அடிகளில் கூட
எழுந்து வளரும் செடிகள் யாவும்
கொட்டிக் கிடக்கும் விதைகள் கூட
கொழுந்து விட்டுச் செழித்து முளைக்கும்,

கொட்டும் நீரைச் சுமந்து மேகம்
ஒட்டு மொத்த நாடும் செழிக்க
சொட்டும் நீரும் சேர்ந்தே நதியாய்
கட்டுப் பாடு விதித்தே ஓடும்,

காட்டு வளத்தைக் காத்திட நாங்கள்
கூட்டுச் சேர்ந்தே கோற்போம் கைகள்
வீட்டுக்கு வீடு நட்டால் மரத்தை
விட்டுப் போகும் வினைகள் யாவும்,

மொட்டு விரித்துப் பூக்கள் மலர்ந்திட
சிட்டுக் குருவிகள் தேனைக் குடித்து
கட்டுப் பாடு இல்லாமல் மகிழ்ந்திட
நடுவோம் மரத்தைச் செழிக்கட்டும் பூமி.

அருண்சிவா

## "செழிக்கட்டும் பூமி"

அழகு முகத்துடன்
 பூமி பந்து
உலகமானது

புன்முறுவலுடன்
மனிதனை வரவேற்றது
அப்பொழுது
அதன் பெயர் பூமி
இப்பொழுது ....?

மனிதனை
பூமி கண்டதும் மகிழ்சசி
ஆறாம் அறிவு
அவன் மண்டையிக்குள்
இருந்ததால்
இரட்டிப்பு மகிழ்ச்சி

இனப்பெருக்கம்
பணப்புழக்கம் எல்லாம்
கன மாற்றத்தை ஊட்டியது
மனித மூளையையும்
மாற்றி பூட்டியது

கருத்தும் கருத்தும் மோதி
போர் கண்டது
பின் மூண்டது
யார் என்பது
இன்னும் நிலுவையில்

பூமியின்
புன்னகை முகங்கள்
போரின்
பற்கள் கடித்து குதறுவது
இன்னும் தொடர்கிறது

இருண்ட பூமியில்
 நிலாவை
நிலை நிறுத்தப் போகிறோம்
ஒளிக்கீற்று பெரும்
உச்சி மாநாடு நடக்கிறது

ஆதி பூமி
மீதிக்காலம் தேடுகிறோம்
சாதி ஒழிக்கும்
நீதி வழி நாடுகிறோம்

செழித்த பூமி
ஒளிர சமாதானம் மிளிர வேண்டும்
இந்த பெண்கள் மாநாட்டில்
உங்களையும் அழைக்கிறோம்
மனிதம் செழித்த பூமி அமைப்போம்.

மிஹிந்தலை ஏ, பாரிஸ்

## வானில் தவழும் வெண்ணிலா !

வானில் தவழும் வெண்ணிலா - இந்த
வனிதையின் முகமாய் வந்ததா?
தேனில் ஊறிய பலாவா - இந்தத்
தேவதை இதழாய் ஆனதா?

விண்ணில் அசையும் முகிலா - அழகு
விரிகுழலாய் தலையில் அமர்ந்ததா?
மின்னும் மின்னலின் ஒளிக்கீற்றா - இவர்
மேனியாய் உருவெடுத்து வந்ததா?

அமெரிக்க நாட்டு ஆப்பிளா - இவர்
அற்புதக் கன்னமாய் ஆனதா?
உமர்கயாம் கவிஞரின் பாடலா - இவர்
உருவமே உவமையாய் வந்ததா?

கொற்கைத் துறையின் முத்துக்களா? - இவர்
சிரிக்கும் பற்களாய் ஆனதா?
பொற்புடைத் தாமரை இதழ்களா? - இந்தப்
பூவையின் பொன்னுடல் ஆனதா?

எள்ளுச்செடி எழில்பூவோ - இவர்
இனிய நாசியாய் வந்ததா?
துள்ளியாடும் கெண்டையா - இவர்
துடிக்கும் விழிகளாய் ஆனதா?

செவ்வாழை மரத்தின் தண்டா - இவர்
சிவந்தக் கால்களாய் வந்ததா?
தவத்தைக் கலைத்த ஊர்வசியா - இங்கு
தரையில் தாரகையாய் வந்ததா?

கவிஞர்.அ.முத்துசாமி,
தாரமங்கலம்.

## இறைவா மன்னித்தருள்க!

பாவங்கள் போக்கி எம்மை
பரிசுத்தம் ஆக்க வந்து
போகின்ற பத்தே! போய் வா!
பொல்லாத தீதின் பக்கம்
போகவே மாட்டோம்! ரப்பே!
புரிந்துசெய் தோமே "தௌபா"
ஆகவே எங்கள் பாவம்
அனைத்தையும் மன்னித் தருள்வாய்!

சத்தார் எம். அஸாத்

## காமாட்சி

அற்புதம் நிகழ்திட் டன்னை யவளே
சொற்பதத் தாலே சொல்லைச் சரமென
தொடுத்திட் டாரை தொழுதிட் டாளே
சடுதியி லேயே கொடுத்திடு வாளே
காமாட் சியம்மை கார்முகி லான
வாமாட் சிக்கடைக் கண்ணா லேயே

இரா. விஜயகல்யாணி
சென்னை

## உறவை நாடும் உயிரே

பெண்ணிற்குத் தருகின்ற வரங்களெல்லாம்
பெண்ணடிமைத் தத்துவத்தின் கீழேவரும்
மண்ணுலகில் பெண்மையினைப் போற்றாத
மாமுனிவர் இருந்தாலும் என்னபயன்?
கண்ணிருந்தும் குருடர்போல் வாழுகின்றார்
கண்ணியத்தின் வேறாமே மாற்றமுண்டோ!
வண்ணமெனப் பெண்களையும் மதிக்காதார்
வரந்தந்தும் சாபமாகும் உண்மையன்றோ!!

விண்ணகத்தில் சாபமுமே சக்திக்கே
விளங்கவில்லை ஏனென்று? நியதிதானோ!
மண்ணகத்தில் முனிவர்கள் தந்தவரம்
மாறிப்போய் சாபமாதல் முறையுதானோ!
எண்ணத்தில் நற்சிந்தை தனைக்கொண்டு
எந்நிலையும் வரம்வேண்டாம் உணர்வீர்கள்!
பண்பாட்டுச் செயலல்ல இத்தனையும்
பாங்குடனே பெண்ணினத்தைப்
போற்றிவாழ்க! வாழ்க! வாழ்க!

வாழ்வுநெறி தனைமறந்து பெண்களுமே
வழிதவறிப் போகாதீர் முனிவரிடம்
தாழ்வுகளும் வாராதே சமுதாயத்தில்
தரமான வாழ்விற்கே இடமுண்டாம்.
காழ்ப்புணர்ச்சிக் கொண்டசிலர் கள்ளமாக
கருத்துரைக்கும் வரங்களுமே சாபமாகும்.
பாழ்பட்டுப் போகாதீர் அவரிடமே.
பசுமையான நல்லறமே கிடைக்குமன்றோ!

பைந்தமிழ்ப் பாமணி
சரஸ்வதி பாஸ்கரன்

## தேவை... தேவை... தேவை...

சிந்தனை தேவை
சிறப்புடன் செயலாற்ற
அணுகும் முறையதனில்
அன்பும் தேவை !
விழிப்புணர்வு தேவை
வீண் கலக்கம் தவிர்க்க !
நட்பெனும் நல்லொழுக்க
நேயம் தேவை
நனிசிறக்கும் மானுடம்....!
தேவைக்குள் தேவையாகும்
நுட்பம் தேவைதான்...
எனினும் எளிதாக
கிடைப்பதில்லை
நுண்ணோக்கும் திறன்..!
நுட்ப அறிவுத்திறத்தால்...
மானுடம் மலரும்....
மகத்தான மனிதநேயப்
பூங்காவில் நாள்தோறும் !

கா.ந.கல்யாணசுந்தரம்.

# உறவை நாடும் உயிரே

கருவறையில் பத்துமாதம் இருந்து பாரைக்
காணவந்த பெருவரமாம் பிள்ளை இங்கே
திறந்துவிழி பார்த்ததுமே தெரியும் தெய்வம்
தாரணியில் அம்மா வென்ற ழைக்கும்
கரந்துபாலை ஊட்டுகையில் காணும் இன்பம்
கைதவழும் பிள்ளைநிலா கடவுள் செல்வம்
இறந்துவிடத் துன்பமதும் இன்பம் வந்தெம்
இல்லமதில் மகிழ்வுதனை இனிது சிந்தும்

அழகுநிலாக் காட்டியன்னை அப்பா என்பாள்
அங்குசூழ நின்றவரை அறியச் செய்வாள்
பழகவரும் மாமனையும் பார்த்தே நன்றாய்
பாசமுடன் உறவென்று பழகிச் சொல்லும்
வழமையாக வாசலுக்கு வந்த சொந்தம்
வாசமென வந்துறவை வாரிக் கொஞ்சும்
பழமைமிக்க உறவுகளும் பாசம் கொண்டே
பாட்டன்பாட் டியெனத்தா னழைத்து நிற்கும்

பள்ளிசெல்லப் பலவுறவு படலை நிற்கும்
பருவமுறச் சிலவுறவு பாசம் வைக்கும்
தள்ளிவைத்துத் தாயுறவை தாரம் ஏற்கும்
தந்தையாகிப் பின்னுறவைப் பிள்ளை சொல்லும்
கிள்ளையாக தாய்மடியிற் கிடந்த நாளாய்க்
கிழவன்கி ழவியான பின்னே தன்னைக்
கொள்ளியிட்டுச் சுடுகாடு கொண்டு போக
கூடிவந்த உறவெல்லாம் கலைந்து போகும்

வில்லூரான்

# உறவை நாடும் உயிரே

தொட்டணைத்து மோதிரத்தால்
தொடக்கி விட்ட வாழ்க்கையதில்
கிட்டவில்லை துன்பம் என்னைக்
கிடக்கவில்லை நோய்ப் பிணியில்
கட்டளைகள் அதிகம் என்னைக்
கருக்கவில்லை, கண்ணிருந்து
சொட்டரும்பும் ஆனந்தச்
சுகம் கொடுத்தார் உன்தந்தை.

தந்தைமுகம் காட்டி என்னைத்
தாண்டுதடா உன் அழகுச்
சுந்தரமும், அந்த நிலாச்
சோடினையோ?,தாய் அமைக்கும்
பந்தலிடைப் புன்னகைத்துப்
பாவனையிற் கன்னலெனச்
சிந்துகிறாய் பொன் வதனச்
சீர்க்கிணையோ இவ்வுலகம்?.

வற்றிவிடாப் பேரூற்றே
வாசமுயர் சந்தனமே
வெற்றிவிழா நாயகனே
வேதமுணர் கண்மணியே
பற்றிடவே உன்தந்தை
பாய்ந்துவரக் கூவிடுவாய்
உற்றமெனச் சிந்துகின்ற
உறவை நாடும் என்னுயிரே..

அபூ அப்கான்

---

ஒரேயொரு நகைச்சுவையை
திரும்பி திரும்பி சொல்ல
சிரிப்பை குறைத்து கொள்ளும்
மனிதன்
என்றோ நடந்த துன்பத்தை
நினைத்து நினைத்து
தினமும்
கவலை கொள்வதேனோ....?

ஆனந்தன், மதுரை



உன்னை தவிர
யாரையுமே
தேவதையாய்
ஏற்று கொள்வதில்லை
பாழாய் போன

'காதல் மனசு'

கும்பகோணம் - நௌஷாத் கான்.லி
அபுதாபி

# வாழ்வில் மகிழ்ச்சியுடன் இருப்பது எப்படி...?





வாழ்வில் எந்த வயதிலும் மகிழ்ச்சியுடன் இருக்கலாம். அதற்கான சில விதிகளை பல நூல்களில் ஆராய்ந்து உங்களுக்கு அளிக்கிறோம்.

1. எந்த விஷயத்தைப் பற்றியும் கவலை கொள்ளாதீர்கள். நடக்கிறது நடக்கும், எல்லாம் ஈசன் செயல் என்பதை உணர்ந்து செய்யவேண்டிய கடமைகளைச் செய்து விட்டு நிம்மதியாக இருங்கள்.

2. எந்த வயதிலும் புதிய விடயங்களைப் படித்துக்கொண்டே இருங்கள். உதாரணம்:மின், கணனி, கலைகள் போன்றவை. உங்களுடைய மூளையை களைக்க விடாதீர்கள். மூளைக்கு வேலை கொடுத்துக் கொண்டே இருங்கள். இப்படிச் செய்தால் ஞாபகசக்தியை இழக்கும் நோயைத் (Dementia) தடுக்கலாம்.

3. உங்களுக்கு மகிழ்ச்சி தரும் பொருட்களை, உங்களைச் சுற்றி வைத்துக் கொள்ளுங்கள். அவற்றை அடிக்கடி பார்ப்பதால் பெரும் மகிழ்ச்சி ஏற்படும்.

4. உங்கள் உடல் நிலையைப் பாதுகாத்துக் கொள்ளுங்கள். இதற்காக ஒழுங்காகத் தேகாப்பியாசம் செய்வது மிகவும் முக்கியமானது. உணவு விஷயத்தில் கவனமாக நடந்து கொள்ளுங்கள். பசிக்குச் சாப்பிடுங்கள். ருசிக்காகச் சாப்பிடாதீர்கள்.

5. கடந்தகால நிகழ்ச்சிகளை நினைத்து வருத்தப்படாதீர்கள். இன்றைய நாள் எமக்குக் கிடைத்த பரிசு என்பதை உணர்ந்து அதை இன்பமாகப் போக்குங்கள்.

6. வாழ்க்கையில் எளிமையான விடயங்களில் இன்பம் கொள்ளுங்கள். இயற்கைக் காட்சிகளை அனுபவித்து மன நிறைவு பெறுங்கள். இது இல்லையே, அது இல்லையே என்று அலட்டிக் கொள்ளாதீர்கள். உலகில் பல நாடுகளில் ஒன்றுமே இல்லாதவர்களும் வாழத்தான் செய்கிறார்கள் அல்லவா..?



7. வாழ்க்கை துன்பம் நிறைந்தது என்பதை ஒத்துக்கொள்ளுங்கள். இப்படித்தான் நடக்க வேண்டும் என்று நினைக்காதீர்கள். எப்படி நடந்தாலும் அதை ஏற்றுக்கொள்ளுங்கள். ஆனால் நம்பிக்கையை இழக்காதீர்கள். நம்பிக்கைதான் பல கோடி மக்களை பெருந் துன்பங்களைத் தாங்கிக் கொண்டு வாழ வைக்கிறது.

-டாக்டர் எம்.இராசநாதன்.

உதயசூரியன்